Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 18 (22.03.2003) சனிக்கிழமை இதழ் :170

# ஆயுத உதவியால் அழிவைத் தந்தோரே
# தமிழர் பகுதியை கட்டியெழுப்ப வேண்டும்!



## பொருளாதார நிலை மேம்பட்டாலே அமைதிப் பேச்சு முன்னேறும் - பாலா

(ரோக்கியோ)

**தமிழர் பிரதேசங்களில் புனர்வாழ்வுப் பணியை மேற்கொள்ள பல கோடி ரூபா பணம் தேவை. இதற்கு வெளிநாடுகள்தான் உதவிசெய்ய வேண்டும். இந்த வெளிநாடுகள்தான் இதுவரை அரசுக்கு நிதியுதவியையும் ஆயுத உதவியையும் செய்து பேரழிவுக்குக் காரணமாகவிருந்தன. ஆகவே, அழிந்த எமது தாயகப் பகுதியைக் கட்டியெழுப்புவதற்கு இந்நாடுகளே உதவவேண்டுமென புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று ஜப்பானில் 6 ஆம் கட்டப் பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது தெரிவித்தார்.**

அச்செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

**உள்ளூராட்சித் தேர்தல் புலிகள் பரிசீலிப்பர்**

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் வைப்பது பற்றிய அரசதரப்புக் கோரிக்கை தொடர்பாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுடன் பேசினோம். அவர்கள் இது சம்பந்தமாக புதிய சட்டவாக்கமொன்றைக் கொண்டுவரவிருக்கிறார்கள். முன்பு வேட்புமனுத்தாக்கல் செய்தவர்கள் எல்லாம், இந்தப் புதிய சட்டவாக்கத்தின் பின்னர் தேர்தலில் நிற்க முடியாது. புதிதாகத்தான் நியமனங்கள் கொண்டுவர வேண்டும்.

வட-கிழக்கில், புனர்வாழ்வு புனர்நிர்மாண வேலைகளை "சிறான்" என்ற நிறுவனம் மேற்கொள்கின்ற சூழ்நிலையில், வட-கிழக்கிலுள்ள இந்த உள்ளூராட்சி மன்றங்கள் செமமையான முறையில் நிர்வகிக்கப்பட்டால்- பல வேலைத்திட்டங்களை உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் செய்யலாம் என்ற நோக்கில்தான் நாங்கள் இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆதரவு வழங்குவது பற்றிப் பரிசீலனை செய்வோம் என முடிவு செய்திருக்கிறோம். மேற்கொண்டு, தமிழ்ச்செல்வன் தலைவருடன் கதைத்து மற்றும் எமக்கு ஆதரவான அரசியல் கட்சிகளுடன் கதைத்து இறுதி முடிவு எடுப்பார். இது பற்றிய

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். முஸ்லிம்கள் நடாத்திய அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஈராக் மீது அமெரிக்காவின் தாக்குதல் தொடுக்கப்பட்டதைக் கண்டித்து, நேற்று யாழ். முஸ்லிம்களால் அமெரிக்க அதிபர் புஷ்ஷினது கொடும்பாவி எரிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அமெரிக்காவின் தேசியக்கொடியும் எரிக்கப்பட்டது.

நேற்றையதினம் யாழ். பள்ளிவாசலில் கூடிய முஸ்லிம் சமூகத்தினர், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷின் கொடும்பாவியைத் தூங்கியபடி பள்ளிவாசலிருந்து புறப்பட்டு, ஐந்து சந்தியினை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ். வீதி வழியாக கஸ்தூரியார் வீதியை அடைந்து, அந்த வீதிச் சந்தியில் வைத்து கொடும்பாவியையும் அமெரிக்கக் கொடியினையும் எரியூட்டினர்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டதோடு, 'ஜோர்ஜ் புஷ் ஒழிக', 'அமெரிக்கா ஒழிக', 'நாளைய தலைவர் அல்லாஹு" அக்பர்' என்ற கோஷங்களையும் எழுப்பினர். (சு.ரா)

## சீனநாட்டு மீன்பிடி ட்ரோலர் கிழக்குக்கடலில் மூழ்கடிப்பு
### 17 சீனர்கள் பலியானதாகத் தகவல்

(கொழும்பு)

சுண்டிக்குளம் கடலில் சீனர்களின் மீன்பிடி ட்ரோலர் படகு தாக்கப்பட்டதில், 17 சீனர்கள் கொல்லப்பட்டதாகவும் 9 பேர் படுகாயமுற்றதாகவும் தெரியவருகின்றது.

நேற்று அதிகாலை நடைபெற்ற இச்சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளின் தாக்குதலே காரணமென கடற்படை தெரிவித்ததாக வெளியான செய்தியை கடற்புலிகள் மறுத்துள்ளனர். தமக்கும் இச்சம்பவத்துக்கும் எவ்வகையிலும் தொடர்பில்லையென அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை - இத்தாக்குதல் பற்றி நேற்றிரவு கடற்படையின் உயரதிகாரியொருவர் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தபோது - தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தியதாக உறுதியாகக் கூறமுடியாதுள்ளது எனவும், இது விபத்தாகக் கூட இருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

தாய்வான் நாட்டுக் கொடியுடன் காணப்பட்ட இந்த ட்ரோலரினுள், சீன மீனவர்களே இருந்ததாகத் தகவலொன்று தெரிவித்தது. இதே வேளை, தாம் மீன்பிடித்துக் கொண்டிருந்த பகுதியில் கடற்படைப் படகு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அமைதி முயற்சிக்கு அமெரிக்கா முன்னுரிமை வழங்கும்
### றிச்சர்ட் ஆர்மிரேஜ் உறுதி

(வொஷிங்ரன்)

ஈராக் மீதான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டாலும் இலங்கையின் அமைதி முயற்சிக்கும், இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கும், அமெரிக்கா முன்னுரிமை கொடுக்கும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

ஹெக்கோனில் நடைபெறும் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்கு ஆர்மிரேஜ் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 14 ஆம் திகதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னோடியான கூட்டம் வொஷிங்ரனில் நடைபெறும். இதில் எந்த மாற்றமும் இல்லை. 29 நாடுகளின் நிதியமைச்சர்களோடு, 25 நிதியமைப்புக்களும் இதில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருக்கின்றன என்றும் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க-பிரிட்டிஷ் படைகள் பஸ்ரா நகர் நோக்கி நகர்வு!



ஈராக்குக்குள் நுழையும் அமெரிக்கப் படை வாகனங்கள். உள்ளே- வெள்ளைக்கொடியுடன் சரணடையும் ஈராக்கிய சிப்பாய்கள் இருவர்.

ஈராக்கிற்குள் முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டுவரும் அமெரிக்க-பிரிட்டிஷ் படைகள் அந்நாட்டின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவை நோக்கி நகர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - அமெரிக்காவின் தரைப்படையின் கடற்பிரிவான யு.எஸ். மரைன்ஸ்- ஈராக்கின் ஒரேயொரு ஆழ்கடல் துறைமுகமான உம் காசிர் ஐ நெருங்கியிருப்பதாக நேற்றிரவு தெரியவந்தது.

இறுதியாகக் கிடைத்த தகவலின்படி, துறைமுகம் அமெரிக்க- பிரிட்டிஷ் படையினரின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் இது உறுதிசெய்யப்படவில்லை.

**குவைத் மீது பட்ரியாட் தாக்குதல்**

இது இவ்வாறிருக்க - குவைத்திலுள்ள அமெரிக்க- பிரிட்டிஷ் படைத்தளங்கள் மீது- ஈராக், பட்ரியாட் ஏவுகணைகளைத் தொடர்ந்து ஏவி வருகின்றது. (மேலும் படங்கள், செய்திகள் உள்ளே)

### விண்ணாணம் விநாசியர்



ஷெல் தந்தாக்கள்தானே, மீள்றதுக்கு செல்வத்தையும் தரவேணும்...!




ஆறாம் கட்டப் பேச்சுக்களின் முடிவில் நடைபெற்ற, நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் பாலா, ஹெல்கிஸன், பீரிஸ்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-626)

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்



பெயர் : நி.சுமன்
முகவரி: உடுவில், மானிப்பாய்.

### மூன்றாவது அகவையில்

பெயர் : உ.வித்யா
முகவரி: அவுஸ்திரேலியா (சிட்னி)



### ஆறாவது அகவையில்



பெயர் : யோ.அஜித்
முகவரி: அந்தோனியார் வீதி, சுன்னாகம்.

### பத்தாவது அகவையில்

பெயர் : வை.ஸேந்தீஸ்
முகவரி: உடுவில் கிழக்கு, சுன்னாகம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாடிக்கையாளருக்கு முக்கிய அறிவித்தல்

இல 638, பருத்தித்துறை வீதி, நல்லூர், முன் வீதியில் அமைந்துள்ள சாந்தி சலூனில் கடமையாற்றிய

**மயில்வாகனம் விஜயன்** ஆகிய நான்

**இல.1, பருத்தித்துறை வீதி** (திலீபன் ஸ்தூபிக்கு அருகாமை)

**நல்லூரில் றூபன் சலூனை**

ஆரம்பித்துள்ளேன் என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். (சி-700)



## EDUCATION & TRAINING DIVISION
### JAFFNA INSTITUTE OF INDUSTRIAL MANAGEMENT

No. 134, Station Road,
Jaffna.

இங்கிலாந்தின் உயர்தரமான பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பை, நீங்கள் எவரும் வீட்டிலிருந்து மேற்கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரி ஆகலாம்.

| | | |
|---|---|---|
| Oxford Brooks University | - | IELTS, ஆங்கிலம் |
| Cambridge University | - | AS,A/L, ஆங்கிலம் |
| London University | - | B.A, B.Sc, LLB, M.Sc |
| Oxford Open Learning | - | Management, IAM |
| Computer | - | Microsoft Licensing scheme |
| IT Skills, EDCL, B.C.S | | |
| Book- Keeping & Accounting | } | IAB, AAT, CAT |
| Hotel Management | - | Norwich City College |
| Marketing, Elic | - | National Extension College |
| Journalism | - | N.C.J Training Ltd |

ஆகிய பல்கலைக்கழகங்களில்/துறைகளில் பட்ட கற்கைநெறிகளை மேற்கொண்டு, பெறுமதி பட்டங்கள் பெற்று வாழ்விலே வளம் பெறலாம். கடித மூலம் தொடர்பு கொள்க. (288)


## கிராமசேவகர் அலுவலக நாட்கள் அறிவிப்பு

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால், கிராம சேவையாளர்களின் அலுவலக நேரத்தினை வரையறைசெய்யும் சுற்றறிக்கையொன்று சகல மாவட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையின் பிரகாரம்- சகல கிராம சேவையாளர்களும் திங்கள், புதன், சனி ஆகிய கிழமைகளில் கட்டாயமாக, தத்தமது அலுவலகங்களிலிருந்து கடமைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும்,

இச்சுற்றறிக்கையின்படி தமது கடமையை மேற்கொள்ளாத கிராம சேவையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லி)

## விடியோ படக்காட்சி

புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில், ஈரானியத் திரைப்படமான, "சமீரா மஹ்மல்பவ்" இயக்கிய **The Black Boards** (கரும்பலகைகள்) என்ற திரைப்படம் இடம்பெறும். இது யாழ்.பல்கலைக்கழக சிற்றி ஹோலில் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குக் காண்பிக்கப்படும். இதில் ஆர்வலர் எவரும் பங்குபெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கிறார்.

இத்திரைப்படம் - ஈரான், ஈராக் எல்லைப் பகுதியில் வாழும் குர்திஷ் மக்களின் அவல வாழ்வை எதிர்கொள்ள நேரிடும் இரு இளம் ஆசிரியர்களைப் பற்றியது. இருபது வயது நிரம்பிய இயக்குநர் "சமீரா மஹ்மல்பவ்" இற்கு, கேன்ஸ் திரைப்பட விழாவில் இப்படத்திற்காக **Tris-du jury** விருது கிடைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## படையினர் வெளியேறியும் இயங்கமுடியாத பாடசாலை

மருதங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கட்டடத்தில் நிலைகொண்டிருந்த படையினர், அக்கட்டடத்தைவிட்டு வெளியேறிய போதும், அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் பாடசாலை அமைந்துள்ளதால் மீளவும் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1999 ஆம் ஆண்டின் இறுதியில், இராணுவத்தினர் பளை மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையின்போது இப்பிரதேசங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர்.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் இருந்த மக்களும் அச்சத்தினால் இடம்பெயர்ந்தனர். இதனால் படையினர் இப்பகுதியில் உள்ள வீடுகளில் நிலைகொண்டிருந்தனர்.

எனினும், அண்மையில் ஏற்பட்ட சமாதானச் சூழலை அடுத்து, தமது வீடுகளில் மீளக் குடியேற அனுமதிக்குமாறு கோரி இடம்பெயர்ந்த மக்கள் பல வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

எனினும், பாடசாலைக் கட்டடம் அமைந்துள்ள பகுதி இராணுவத்தினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், பாடசாலையை மீள இயக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(34)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

SPOKEN ENGLISH WITH GRAMMER
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI,
426 (302) K.K.S ROAD.
JAFFNA.
(சி-664)



**ராஜா** யாழ்ப்பாணம்.

சரத்குமார், மீனா, விஜயகுமார், வடிவேல் நடித்த

**மாயி**

நேரம்:- 10.30, 2.30, 6.30 (சி-628)



**நிரஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

அர்ஜுன், பூஜா நடித்த

**சூரியபார்வை**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

**RUSH HOUR - 2**

(சி-627)


## புறநிலைப் படிப்புகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## EXTRA - MURAL STUDIES UNIT UNIVERSITY OF JAFFNA

### 2003/2004 கல்வியாண்டிற்கான அடிப்படைக் கற்கைநெறிகள்

**Foundation Courses for the academic year 2003/2004**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புக்களில் பொதுவிரிவுரைகளையும் அடிப்படைக் கற்கைநெறிகளையும் 2003/2004 கல்வியாண்டில் நடத்தவுள்ளது. இவை சனி, ஞாயிறு தினங்களில் பல்கலைக்கழகத்தில் மு.ப. 9.00 முதல் 12.00 மணிவரை இடம்பெறும். இக்கற்கைநெறிகளைப் பயில சான்றிதழ்கள் எதுவும் தேவையில்லை. ஆர்வமே தகுதியாகக் கொள்ளப்படும். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் எவரும் தமது முகவரியுடன்கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவையை இணைத்து அடிப்படைக்கற்கைநெறியின் தலைப்பைக் குறிப்பிட்டு தனித்தனியாக விண்ணப்பிக்கலாம். ஒருவர் எத்தனை கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். ஒரேநேரத்தில் ஒரு கற்கைநெறியைப் பயில மாத்திரம் அனுமதிக்கப்படுவர். குறித்தவொரு கற்கைநெறிக்குப் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுமிடத்தே (ஏறத்தாழ 40 பேர்) கற்பித்தல் இடம்பெறும். அடிப்படைக் கற்கைநெறி ஒன்று குறைந்தது 40 மணித்தியாலக் கற்கைக் காலத்தைக் கொண்டது. பதிவுக் கட்டணமாக ரூபா 200 செலுத்துதல் வேண்டும். பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட பொதுவிரிவுரைகள் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். பொது விரிவுரைகளுக்கு கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

1.0 பொது விரிவுரைகள்
Public Lectures
- 1.1 சுகவாழ்வு
  Healthy Life
- 1.2 பொதுப் போக்குவரத்து விதிமுறைகள்
  Public Transport Regulations

2.0 அடிப்படைக் கற்கை நெறிகள் பின்வருமாறு:
- 2.1 தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (அடிப்படை)
  English for Communication (Basic)
- 2.2 தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (உயர்தரம்)
  English for Communication (Advanced)
- 2.3 அலுவலகத்தில் பணிபுரிவோருக்கான ஆங்கிலம்
  English for office staff
- 2.4 முன்பள்ளிக் கல்விக்கான ஆங்கிலம்
  English for pre - school Education
- 2.5 முன்பள்ளிக் கல்வி
  Pre - school Education
- 2.6 மனித உரிமைகள்
  Human Rights
- 2.7 பெண்களும் அபிவிருத்தியும்
  Women & Development
- 2.8 இளைஞரும் அபிவிருத்தியும்
  Youth & Development
- 2.9 குழந்தைகளும் அபிவிருத்தியும்
  Children & Development
- 2.10 பூகோளமயமாக்கலும் அபிவிருத்தியும்
  Globalization & Development
- 2.11 கலாசாரமும் அபிவிருத்தியும்
  Culture & Development
- 2.12 பேண்தகு அபிவிருத்தி
  Sustainable Development
- 2.13 அலுவலக முகாமைத்துவம்
  Office Management
- 2.14 இதழியல்
  Journalism
- 2.15 விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு
  Increasing Agricultural Productivity
- 2.16 உணவகங்களின் முகாமைத்துவம்
  Restaurant Management
- 2.17 தாதிப்பராமரிப்பும் முதலுதவியும்
  Nursing & First Aid
- 2.18 விலங்கு வளர்ப்பு, கோழி வளர்ப்பு அபிவிருத்தி
  Animal husbandry & Poultry Development
- 2.19 மொழி பெயர்ப்புக் கலை
  Art of Translation
- 2.20 நூலகவியல்
  Library Science

3.0 புதிய கற்கைநெறிகள்
New courses 2003/2004
- 3.1 சிறுதொழில் முகாமைத்துவம்
  Small Business Management
- 3.2 தகவல் தொழில்நுட்பம்
  Information Technology
- 3.3 மனித வள முகாமைத்துவம்
  Human Resource Management
- 3.4 சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
  Marketing Management
- 3.5 சோதிடக்கலை
  Astrology
- 3.6 சூழல் முகாமைத்துவம்
  Environmental Management
- 3.7 பொதுத்துறைக் கணக்கீடு
  Public Sector Accountancy
- 3.8 நிதி முகாமைத்துவம்
  Financial Management
- 3.9 கலை ரசனை
  Arts Appreciation
- 3.10 சினிமா ரசனை
  Film Appreciation
- 3.11 சிவாசாரியாரின் பங்கும் பணிகளும்
  Contributions and functions of Sivacharyas
- 3.12 தொழில் சங்கவியல்
  Tradeunionism

**புலமை சான்றோர்** (Resource Person)

மேற்படி தலைப்புகளில் நடைபெறவுள்ள கற்கைநெறிகளில் புலமை சான்றோராகப் பணியாற்ற விருப்பமும் தகுதியுமுள்ள பல்கலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள புலமை சான்றோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்கள் துறைசார் தகைமையை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலமைந்த சுயவிபரக்கோவையை (Bio Data) இணைத்து புறநிலைப் படிப்புகள் அலகுக்கு விண்ணப்பிக்கவும்.

**புறநிலைப் படிப்புகள் அலகு,** - **இணைப்பாளர்.**
**யாழ்.பல்கலைக்கழகம்.**
10.03.2003. (சி-699)

# அமெரிக்க கைப்பொம்மைகளே பேச்சுக்கு அனுப்பப்படுகின்றனர்!

## அரச தரப்பைச் சாடுகின்றார் விமல் வீரவன்ச

நாட்டில் நீண்டகாலமாகப் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினையைப் பேச்சுக்களின் மூலமோ அல்லது யுத்தத்தின் மூலமோ தீர்ப்பதற்கான ஏதாவதொரு வழிமுறையைக் கையாளவேண்டும். குழந்தைத்தனமான பேச்சுக்களை விட்டுவிட்டு, எப்படியாவது பிரச்சினையைத் தீர்க்க முனையவேண்டும் என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கண்டியில் 'ஏன் இந்தக் கூட்டணி நாட்டுக்குத் தேவை?' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே விமல் வீரவன்ச இவ்வாறு குறிப்பிட்டார்.

எமது நாட்டிலுள்ள முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு அமெரிக்காவில் இருந்து இறக்குமதியான கைப்பொம்மைகளே அனுப்பப்படுகின்றனர்.

இவர்களுக்கு எமது நாட்டின் கலாசாரம், நாகரிகம், வரலாறு, பொருளாதார முறைமை பற்றி எதுவுமே தெரியாது. எனவேதான் இந்த அரசாங்கத்தை வீழ்த்தவும், புதிய அரசைத் தோற்றுவிக்கவும் கூட்டணி அவசியமாகியது. ஐ.தே.மு அரசின் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மக்களுக்கு நன்மை செய்யாத எந்தவொரு அரசாங்கத்தின் ஆயுளும் ஒரு வருடம் ஐந்து மாதங்களுக்கு மேல் நிலைக்காது. அதனை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம். இப்போது இந்த அரசு, ஒரு வருடம் மூன்று மாதங்களைப் பூர்த்தி செய்திருக்கின்றது.

இன்னும் இரண்டு மாதங்களில் இந்த அரசு நிச்சயம் கவிழும். இந்த அரசாங்கத்தில் 74 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால், இவர்களால் 74 பேருக்கே வேலை வழங்க முடியவில்லை என்றும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

### ஜி.எல்.பீரிஸ் அமெரிக்கா செல்கிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழுவுடனான ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் நேற்று முடிவடைந்ததையடுத்து, அரச தரப்புக் குழுவுக்குத் தலைமை தாங்கிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்கா செல்கிறார்.

அங்கு அவர் - அமெரிக்கப் பிரதி அமைச்சர் ஆர்மிரேஜ் உட்பட உயர் அதிகாரிகளுடன், அமைதிப் பேச்சுக்கள் தொடர்பாகப் பேசவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

### தேசிய மாநாட்டு விழா

அகில இலங்கை அரசாங்கப் பொதுஊழியர் சங்கத்தின் 9 ஆவது தேசிய மாநாட்டு விழா மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழா எதிர்வரும் 30 ஆம் திகதி கல்முனை உவெஸ்லி உ்யர்தரப் பாடசாலையில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இவ் விழாவிற்கு மட்டக்களப்பு அரச அதிபர், அம்பாறை அரசஅதிபர் எஸ்.ஏ.சி. சிறிவர்த்தன ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர் என வட மாகாண ஊழியர் சங்கத்தின் இணைப்பாளர் த.சிவராஜா தெரிவித்தார். (ரா)

# போரில் காயமுற்ற 10 ஆயிரம் படையினர் வேறு பணிகளில் அமர்த்தப்பட்டனர் !

இராணுவத்தைச் சேர்ந்த பத்தாயிரத்து அறுபத்துநான்கு பேர் போர் முனையில் காயமுற்று, மீண்டும் யுத்தமுனைக்கு அனுப்பப்பட முடியாதநிலையில் வேறுபணிகளில் அமர்த்தப்பட்டுள்ளதாக இராணுவத்தின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகின்றந்து.

கடந்த காலங்களில் புலிகளுடனான யுத்தத்தில் ஆயிரக்கணக்கான படையினர் படுகாயங்களுக்குள்ளாகினர். படுகாயமடைந்தவர்களில் ஒருபகுதியினர் நிரந்தரமாக இராணுவ சேவையிலிருந்து விலக வேண்டியநிலை ஏற்பட்டது.

மேலும் ஒரு தொகுதியினர் மீளவும் போர் முனைக்குச் செல்லமுடியாதநிலை இருந்தபோதும் - வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களின் தொகையே பத்தாயிரத்து அறுபத்துநான்கு எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு போர் நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளோரில் 432 பேர் உத்தரவிடும் அதிகாரம்கொண்ட அதிகாரிகள் என்றும், 9632 பேர் கனிஷ்டதர அதிகாரிகள் மற்றும் சாதாரண சிப்பாய் தரங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், போர்முனையில் காயமடைந்து, நிரந்தரமாக இராணுவ சேவையிலிருந்து விலக்கப்பட்ட படையினரின் எண்ணிக்கையைப் படைத்தரப்பு - உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான பொதுக்கூட்டம்

வடமராட்சி கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்குப் பருத்தித்துறை சென்.தோமஸ் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த அனைத்துக் கத்தோலிக்க ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (13)

# முக்கிய விவாதங்களில் இருந்து ஒதுங்கும் பொ.ஐ.மு. எம்.பிக்கள்!

## மகிந்த ராஜபக்ஷ கண்டனம்

முக்கியமான சந்தர்ப்பங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் - நாடாளுமன்றத்துக்கு வருவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கண்டித்துள்ளார்.

இவ்வாறு முக்கியமான விவாதங்களுக்குச் சமுகமளிக்காது இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாம் இனிமேல் கடுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முன்வரிசையில் அமரும் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் விவாதம் நடந்து கொண்டிருக்கும்போதே அடிக்கடி வெளியில் சென்று வருவதாகவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# கால்நடைகளுக்கு கால்வாய் நோய் இலங்கையில் பரவும் ஆபத்து!

(கொழும்பு)

இலங்கையில் கால் நடைகளுக்குக் கால்வாய் நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகக் கால்நடை மருத்துவ வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

கால்வாய் நோயினால் பாதிக்கப்பட்ட யானையொன்று பொலனறுவவில் இறந்தநிலையில் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. திருமலை - ஹபரண வீதியில், கல்பொத்த என்ற இடத்தில் இந்த யானை இறந்தநிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் பாகங்கள் பேராதனைக்கு மேலதிக பரிசோதனைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இதே வேளை, இப்பகுதிக் காடுகளிலுள்ள மான்கள் உள்ளிட்ட ஏனைய காட்டு விலங்குகளுக்கும் கால்வாய் நோய் பரவியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

கந்தளாய் பகுதிகளில் வாழும் மக்கள் - கால்வாய் நோய்க்கு இலக்கான பல காட்டு மிருகங்களை அவதானித்துள்ளனர். கால்நடைகளுக்கு ஏற்படும் இந்த ஆபத்தான நோய் மனிதர்களுக்கும் பரவக்கூடியது என மருத்துவ வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

### வடமராட்சி கிழக்கில் ஐந்து கிராமங்கள் தெரிவு

(மானிப்பாய்)

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் - முள்ளியான், வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன் ஆகிய 5 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

யுத்தத்தினால் பெரிதும் அழிவுக்கு உள்ளாகியுள்ள மேற்படி கிராமங்களில், மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பொது வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

# மேலதிக மோதல் தவிர்ப்பு நடைமுறை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பம்!

(கொழும்பு)

அரச படையினருக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் மற்றும் நெருக்கடிகள் ஏற்படுவதைத் தவிர்ப்பது தொடர்பான - சாத்தியமான நடைமுறைத் திட்டங்களை தயாரிக்கும் முயற்சியில் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஈடுபட்டிருக்கிறது.

ஹெக்கோன் நகரில் அரச மற்றும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுக்கிடையில் இடம்பெற்ற ஆறாவது சுற்றுப்பேச்சுக்களின் முதலாம் நாள் அமர்வில் - இருதரப்பு மோதல்கள், நெருக்கடிகள் ஏற்படுவதைத் தவிர்ப்பது தொடர்பான நடைமுறைத்திட்டம் ஒன்று உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையிலேயே அரச தரப்புடனும், புலிகளுடனும் - ஆலோசனைகளை நடத்தி, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு திட்டங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் நடாத்தவுள்ள - இரண்டாம் கட்டத் தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பாக எடுக்க வேண்டிய முன்னோடி நடவடிக்கைகள் பற்றிய கூட்டம் நாளை காலை 10 மணிக்கு வண்ணை நாவலர் மாகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல தாய்ச்சங்க நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, வலய மட்ட தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார். (லி)

# வட-கிழக்கு புனரமைப்பு நிதியம்; உலகவங்கியால் ஆரம்பிப்பு!

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வட - கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்பதற்கான புனரமைப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக உலகவங்கி அறிவித்துள்ளது.

வட -கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அவசர மனிதாபிமான புனர்வாழ்வு, புனரமைப்புத் தேவைகளுக்கான நிதியுதவிகளை உலக வங்கியே கையாளவுள்ளது. இதற்காகவே வட - கிழக்குப் புனரமைப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திட்டங்களுக்கு ஏற்ப உலக வங்கி - நிதியை 'சிறான்' ஊடாக வழங்கும்.

புனரமைப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து சகல புனரமைப்புப் பணிகளுக்குமான நிதியுதவிகளையும் இதில் வைப்புச் செய்யுமாறு உலகவங்கி - உதவிவழங்கும் நாடுகளைக் கோரியுள்ளது. (க)

# புனரமைப்பு பற்றிய கூட்டம் அடுத்த மாதம் கொழும்பில்


ரோக்கியோவில் எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னோடியாகப் புனரமைப்புப் பற்றிய கருத்தரங்கு ஒன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி இந்தக் கருத்தரங்கு இடம்பெறும். அரசதரப்புப் பிரதிநிதிகளும், புலிகள் தரப்புப்பிரதிநிதிகளும் மற்றும் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் அதிகாரிகள், ஊடகவியலாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.



ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து - நேற்று மதியமளவில் யாழ். நகரில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதை முதல் இரு படங்களிலும் அமெரிக்க தேசியக் கொடியையும், புஷ்ஷின் கொடும்பாவியையும் அவர்கள் எரிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்-சுதர்சன்)

# தென் ஈராக்கினூடாக தரைவழிப் போர் தீவிரம்



இரவிரவாக ஓய்வின்றிப் புறப்படும் அமெரிக்கப் போர் விமானங்கள்.

## அமெரிக்க - ஈராக் படைகள் நேருக்குநேர் மோதுகின்றன

தென் ஈராக்கியப் பகுதிக்கூடாக தரைவழித் தாக்குதலை ஆரம்பித்த அமெரிக்க மரைன் படையினர் (US MARINES) - ஈராக்கியப் படைகளுடன் நேற்றுமுன்தினம் இரவு முதலாக நேரடிச்சமரில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நேருக்கு நேர் யுத்தத்தில்- சிறியரக ஆயுதங்களோடு - ஏவுகணைகளும் பயன்படுத்தப்படுவதாகக் களத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரைவழித் தாக்குதலில் ஈடுபடும் படையினருக்கு உதவியாக - குவைத்தின் வடபகுதியிலிருந்து - பிரிட்டிஷ் துருப்புக்கள் ஆட்லறித் தாக்குதலைத் தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றனர்.


ஒரு தகவலின்படி - ஈராக்கிய எல்லைகளைக் கடந்த அமெரிக்கப் படையணியொன்று, 200 கிலோ மீற்றர்கள் பாலைவனப் பகுதியைக் கடந்து - யூப்பிறற்றிஸ் நதியின் மேற்குப்பகுதியை அண்மித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- முன்னேறும் அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் - தென் ஈராக்கிலுள்ள எண்ணெய் வளங்கள் தீப்பற்றி எரிவதாகவும் கூறப்படுகிறது.

### ஈராக்கியப் படையினர் 40 பேர் சரண்

தரைவழித் தாக்குதலில் ஈடுபட்டுவரும் பிரிட்டிஷ் ரோயல் மரைன் படையினரிடம் (UK ROYAL MARINES), 40 ஈராக்கியப் படையினர் சரணடைந்ததாக - மேற்கு நாட்டு ஊடகமொன்று தெரிவித்தது. எனினும், இச்செய்தி நடுநிலையானவர்களால் உறுதி செய்யப்படவில்லை.

## ஈராக்கின் ஸ்கட்




ஈராக் தனது, தரையிலிருந்து நடத்தும் தாக்குதலுக்குப் பெரிதும் நம்பியிருப்பது 'ஸ்கட்' ஏவுகணைகள்தான்.

குறுகிய தூர வீச்சுக்கொண்ட இந்த ஏவுகணைகளை வாகனங்கள் மூலம் காவிச்செல்லலாம். இது பழைய தொழில்நுட்பத்தில் உருவானதாக இருந்தாலும் - அமெரிக்கப் படையினரை அச்சுறுத்துவதில் இதுவும் ஒரு முக்கிய ஆயுதமாகிறது.

ரஷ்யத் தயாரிப்பான இந்த ஏவுகணை - இப்போது அல் - ஈராக்கி ஸ்கட், அல் - ஹுசைன், அல்-அப்பாஸ், அல் - ஜீஹ்ரா, அல் - அபிட் எனப் பல்வேறு வடிவங்களில் ஈராக்கினால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்கட் ஏவுகணைகள் மூலமே இரசாயன - உயிரியல் ஆயுதக்குண்டுகள் வந்துவிழலாம் என அமெரிக்கப் படைகள் அஞ்சுகின்றனவாம்.

அறுநூறு கிலோமீற்றரிலிருந்து மூவாயிரம் கிலோமீற்றர் தூரம்வரை பாயக்கூடிய இந்த ஏவுகணைகள், ஈரான் - ஈராக் போரின்போது - ஈரான் தலைநகர் தெஹ்ரானை, ஈராக்கிலிருந்து தாக்குமளவுக்கு சக்தி வாய்ந்தனவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

1991 இல் நடந்த 'பாலைவனப் புயல்' நடவடிக்கையில் - இஸ்ரேல், குவைத், சவூதி அரேபியா ஆகிய பகுதிகளுக்கும் இந்த ஸ்கட் ஏவுகணைகள் செலுத்தப்பட்டு, தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன.

# அமெரிக்க அரசை எண்ணி நாங்கள் வெட்கப்படுகின்றோம்

## சான்பிரான்ஸிஸ்கோவில் நடந்த பேரணியில் ஆயிரம் பேர் கைது







(நியூயோர்க்)

ஈராக் மீதான போரைக் கண்டித்து, அமெரிக்காவில் - சான்பிரான்ஸிஸ்கோவில் நடந்த மாபெரும் எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்ற 1,025 பொதுமக்களை - அமெரிக்கப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சான்பிரான்ஸிஸ்கோவின் - பிரதான நுழைவாயிலான 'ஒக்லண்ட் பே' பாலத்தை மறித்தும் - பொலிஸார் மீது கற்களால் எறிந்தும் ஆர்ப்பாட்டாக்காரர்கள் போராட்டம் நடாத்தினர்.

'நியாயமற்ற போரை நடத்தும் அமெரிக்க அரசை எண்ணி நாம் வெட்கப்படுகிறோம்' எனப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் குரலெழுப்பினர்.

இதேவேளை - அமெரிக்காவின் பிரதான நகரங்களிலும் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் - அமெரிக்காவின் போர் நடவடிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

### சிறார்களும் போராட்டம்

இதேவேளை - ஏதென்சில் நடந்த, போருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பாடசாலைச் சிறார்கள் பங்குபற்றியிருந்தது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தனது நூறு நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு, இப்போராட்டத்தில் கலந்துகொண்ட லெவ்ரெரிஸ் என்ற பதினைந்து வயதுச் சிறுவன்- தனது வகுப்புக்களை விட்டே, தாம் போராட வந்ததாக தொலைக்காட்சிப் பேட்டியில் தெரிவித்தார்.

இதுபோன்று -

சுவிற்சர்லாந்து, ஸ்பெயின், ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

## தெற்கினூடாக நுழையும் அமெரிக்காவுக்கு எதிராக

# ஈராக்கினைக் காக்க போராடும் குடியரசுப்படை!



ஈராக்கிய அரசாங்கப் படைகளில் பிரதானமானதும் முக்கிய படையணியுமாகக் கொள்ளப்படும் - ஈராக் குடியரசுப் படை (Iraq's Republican Guard) - தென் ஈராக்கினூடாகப் புகுந்துவரும் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக மிகக்கடுமையான தாக்குதலை நடாத்தி வருகின்றது.

சதாம் ஹுசைனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் இப்படையில்- ஈராக்கிய மக்கள் தொண்டர்களாகப் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப் படைத்தரப்பில் பிரபல்யம் வாய்ந்த, வலிமையான மரைன் படைப்பிரிவுக்கு நிகராகப் பேசப்படும் - ஈராக் குடியரசுப் படையில் 60,000 படையினரோடு - 500 கவச வாகனங்களும் யுத்தத்தில் பங்கேற்கின்றன.

பக்தாத்தையும், சதாமையும் காப்பதற்காக இந்தப் படையணி நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆட்பல ரீதியாக ஈராக்கே பலமான நிலையிலுள்ளது?



1991 இல் அமெரிக்கா தலைமையிலான கூட்டு இராணுவத்தினருக்கும் ஈராக் படைக்கும் இடையில் யுத்தம் நடந்த பின்னரும் மத்திய கிழக்கில் அதிகளவு படைப்பலத்துடன் இருக்கும் நாடாக ஈராக் விளங்குகின்றது.

1991 ஆம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் பின்னர் - ஈராக்கின் ஆயுத உற்பத்திகள், மற்றும் இராணுவ விஸ்தரிப்புக்களுக்கு அமெரிக்கா தடைவிதித்த போதும், துருப்புக்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஈராக்கின் படைபலம் அதிகமாகவுள்ளது.

தந்திரோபாயத்திற்கும் சர்வதேச விவகாரங்களுக்குமான கற்கைகள் நிலையம், அமெரிக்க இராணுவ பலத்தினையும் ஈராக்கிய படைபலத்தினையும் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளது.

இதனடிப்படையில் - அமெரிக்கா, வளைகுடாவில் இரண்டு லட்சத்து பதினொராயிரம் துருப்புக்களையும் ஈராக், நான்கு லட்சத்து முப்பத்தையாயிரம் துருப்புக்களையும் கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா நானூற்றி இருபத்தியொன்பது யுத்த தாங்கிகளையும், ஈராக் இரண்டாயிரத்து அறுநூறு யுத்த தாங்கிகளையும் கொண்டிருக்கின்றன.

இராணுவச் செலவுகளுக்காக முந்நூற்றி நாற்பத்தி மூன்று பில்லியன் டொலர் செலவுசெய்யும் அமெரிக்கா, ஐநூறு யுத்த விமானங்களை வளைகுடாவில் வைத்துள்ளது. அதேபோல் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை இராணுவத்துக்காகச் செலவிடும் ஈராக், முந்நூறு யுத்த விமானங்களைத் தன்வசம் வைத்துள்ளது.

ஈராக் படையணியில் மூன்று லட்சத்து எழுபத்தையாயிரம் பேர் நிரந்தரமாக உள்ளபோதும், அதனைவிட குடியரசு இராணுவம் என்ற மக்கள் படையணியையும் ஈராக் தன்வசம் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் 'சீ நைட்' ஹெலி குவைத்தில் வீழ்ந்து நொருங்கியது

## 12 அமெரிக்க - பிரிட்டிஷ் படையினர் பலி

குவைத் நாட்டில் அமெரிக்க - பிரித்தானிய கூட்டு இராணுவத்தினர் 12 பேர், ஹெலி வீழ்ந்து நொருங்கியதில் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான சி.எச் - 46 சீ நைட் ஹெலிகொப்ரர், தென்ஈராக்கில் இருந்து சில மைல்கள் தொலைவிலுள்ள குவைத் நாட்டின் பகுதியில் வீழ்ந்ததாக, அமெரிக்கப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் பிரித்தானியப் படையினர் எட்டுப் பேரும், அமெரிக்கப் படையினர் நால்வருமாக மொத்தம் பன்னிரண்டு துருப்புக்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய வளைகுடா யுத்தம் - 2 இல் அமெரிக்க- பிரித்தானியக் கூட்டுப் படையினர் சந்தித்த முதலாவது உயிரிழப்பு சம்பவம் இதுவாகும்.

ஹெலி விபத்தில் கொல்லப்பட்ட அமெரிக்க - பிரித்தானியத் துருப்புக்கள், ஈராக்கின் தென்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



வீழ்ந்து நொருங்கிய சீ நைட் என்ற இந்த ரக ஹெலி, 1960 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனை, பறக்கும் பஸ் என்றும் அழைப்பர். 25 துருப்புக்களை ஒரே தடவையில் காவிச்செல்லும் இந்த ஹெலி, வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்காவினால் அதிகளவில் பயன்படுத்தப்பட்டது.

யுத்த முனைக்குத் துருப்புக்களைக் காவிச் செல்வதில் இந்த ரக ஹெலிகள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன.

# வார்த்தை விளையாட்டு - 25

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | | | | 2 | கை |
| | | 3 | | 4 ப | |
| | 5 ஆ | | | | 6 |
| | | டி | | | |
| 7 உ | | | | | 8 மை |
| 9 | | | | | |

முழுப் பெயர் : ........................................

கற்கும் பாடசாலை : ........................................

கற்கும் தரம் : ........................................

முகவரி : ........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

## இடமிருந்து வலம்



1. ....... அறியாமல் காலை விடாதே.
2. முடி அல்லது கூந்தல்.
3. கவிச்சக்கரவர்த்தி.
5. வருடம்.
7. ஒரு சுவை.
9. பாசம்.

## மேலிருந்து கீழ்



1. கோவில்.
3. கட்டாயம் அல்லது நிர்ப்பந்தம்
4. ஒரு வகை உடை.
5. ஆண் ~ இப்படியும் சொல்லலாம்.
6. வெள்ளைநிறம்.
8. ஒருவகை ஊர்வன. (தலைகீழாக)

## வார்தை விளையாட்டு - 24 இன் விடைகள

**இடமிருந்து வலம்**

1. சந்தை
2. காலி
3. மீற்றர்
4. பட்டி
5. வன்னி
6. கள்ளி.
9. சரி.
10. பல்லி.

**மேலிருந்து கீழ்**

1. சமீபம்
2. காலன்
5. வள்ளல்
6. கதலி
7. பரிவு
8. கல்

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 26-03-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 24

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*

**பஞ்சலிங்கம் மதுரதன்**
40/2, கலைமகள் வீதி,
அரியாலை.

*2 ஆம் பரிசு -*

**நல்லகுருநாதன் செந்தாளன்**
கன்பொல்லை வீதி, கரவெட்டி,
நெல்லியடி.

*3 ஆம் பரிசு -*

**நவரத்தினம் அன்ரனி றொபின்சன்**
33, குகன் வீதி, அரியாலை.


★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## காட்டு ராஜா

தாண்டக வனம் என்ற காட்டில் அரசனாக இருந்த சிங்கம் இறந்து போயிற்று. இதனால்



அந்தக் காட்டில் அரசன் பதவி வெற்றிடமாகியது. காட்டிலிருந்த ஏனைய விலங்குகள் எல்லாம் கூடி, யாரை அரசனாக நியமிக்கலாம் என்று யோசித்தன.

அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த குரங்கு தனது சேஷ்டைகளாலும், தந்திரங்களாலும் வித்தைகாட்டி மற்றோரை மகிழ்வித்தது. குரங்கின் அகட விகடங்களில் மகிழ்ந்துபோன ஏனைய மிருகங்கள்- குரங்கையே அரசனாகத் தேர்ந்தெடுத்தால் தாங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று கருதின. குரங்கையே அரசனாகப் பட்டமும் சூட்டின.

குரங்குக்கு இர்ாஜ பதவி கிடைத்ததைக் கண்ட நரிக்கு, பெரும் பொறாமையாக இருந்தது. எப்படியாவது குரங்கை ஆபத்துக்குள் மாட்டி, அதை ஆபத்திற்குள் சிக்கவைத்துவிட வேண்டுமென்று நரி சிந்தித்தது.

அப்போது, காட்டில் சில வேடர்கள் மிருகங்களைப் பிடிப்பதற்காகச் சில பொறிகளை வைத்து, அதற்குள் மிகவும் சுவையான இனிப்புப் பண்டங்களையும், பழங்களையும் வைத்துக் கொண்டிருப்பதை நரி கண்டது. குரங்கு ராஜாவை ஆபத்தில் மாட்டிவைப்பதற்கு இதுதான் சரியான தருணம் என்று நரி திட்டமிட்டது.

உடனே குரங்கைத்தேடிச் சென்றது நரி. "அரசே, தங்களுக்கு மிகவும் அருமையான விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கின்றேன். நீங்கள் என்னுடன் வந்தால் விருந்தளிக்கத் தயாராக இருக்கிறேன்" என்று நரி கூறியது.

நரியின் தந்திரம் குறித்தோ, அதன் நயவஞ்சகத் திட்டம் குறித்தோ குரங்கு அறிந்திருக்கவில்லை. அது விழிப்புடனும் இருக்கவில்லை. நரியின் தந்திரப்பேச்சில் மயங்கிய குரங்கு- அதனுடன் புறப்பட்டுச் சென்றது. நரி தொலைவில் நின்றபடியே "அங்கே உங்களுக்கான விருந்து தயாராக இருக்கிறது" என்று சுட்டிக்காட்டியது.

இனிப்புப் பண்டங்களையும், பழங்களையும் கண்டவுடன் குரங்கு முன்பின் யோசிக்காமல் அவற்றையெடுத்து உண்பதற்காகக் கையை வைத்தது. இனிப்புப் பண்டங்களில் குரங்கு கையை வைத்ததும் வேடர்கள் தயாராக வைத்திருந்த பொறி குரங்கின் கைகளைக் கௌவ்விக் கொண்டது.


குரங்கு வலி பொறுக்கமுடியாமலும், பொறியிலிருந்து விடுபடமுடியாமலும் கூச்சல் போட்டது. குரங்கின் கூச்சலைக் கேட்டுச் சிரித்தபடி நின்றது நரி. "துரோகி, வஞ்சகா" என்று நரியைப் பார்த்துக் குரங்கு திட்டியது.

நரி சிரித்துக் கொண்டே "காட்டு ராஜாவைப் பார். பொறியைக்கூடப் புரிந்துகொள்ள முடியாத நீ என்ன ராஜா? உன்னால் எப்படி ஆட்சி செலுத்த முடியும்? காட்டினுள்ள மிருகங்களை எப்படிக் காப்பாற்ற



முடியும்? உன்னையே காப்பாற்ற முடியாத காட்டு ராஜாவாக இருப்பதைவிட, கத்திக் கத்தியே உயிரைவிடு" என்று கூறிவிட்டு நரி ஓடி மறைந்தது.

## கடல் குதிரை



கடற்குதிரை பற்றிய அதிசயத் தகவல் ஒன்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கடற்குதிரைகளில் ஆண்தான் குட்டிபோட்டு வளர்க்கும். இந்தக் கடற்குதிரை பற்றி இந்தவாரம் அறிந்துகொள்வோம்.

வேறு எந்த உயிரினத்திலும் ஆண்கள் குட்டி போடுவதில்லை. மீன்களில் ஆண்கள்தான் குஞ்சுகளைப் பேணுவது, பாதுகாப்பது, முட்டைகளுக்குத் தேவையான ஒட்சிசனை அளிப்பது போன்ற பணிகளைச் செய்து வருகின்றன. ஆனால், கடற்குதிரை இதைவிடப் பிரமாதமாகச் செயற்படுகிறது. ஆண் கடற்குதிரை- மற்ற ஆண் விலங்குகளைப்போல கருத்தரிப்புக்கு வேண்டிய உயிரணுவை உருவாக்குகிறது. பெண் கடற்குதிரை- மற்ற பெண் விலங்குகளைப்போல சினை முட்டை இடுகிறது. அதற்குப் பிறகு நடப்பதுதான் விசேஷம்! பெண் கடற்குதிரை- கிட்டத்தட்ட 200 சினை முட்டைகளை ஆணின் உடலிலுள்ள வளர்ப்புப் பையில் (brood pouch) சேமிக்கிறது. ஆண்தான் கருவை வளரச்செய்து, கடைசியில் குட்டிக் குட்டிக் கடற்குதிரைகளைப் பிறக்கச் செய்கிறது. சினை முட்டையை, ஆணின் வளர்ப்புப் பையில் போட்டதிலிருந்து, குட்டி பிறந்து 21 நாள் ஆகும்வரை தினசரி காலை வந்து 'அப்பாவும், குட்டிகளும் எப்படி இருக்கீங்க?' என்று குசலம் விசாரித்து விட்டுச் செல்லும் அம்மா கடற்குதிரை! இவ்வளவு அதிசயமான கடற்குதிரைகள்- மருந்துக்காகவும், வேறு காரணங்களுக்காகவும் வேட்டையாடப்படுவதால், வேகமாக அழிந்து வருவது வேதனையான விஷயம்.

## சுவிடன்

**(Kingdom of Sweden)**

வடக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள ஒரு தொழில்வளம் மிக்க நாடு. மரங்கள், உயர்ரக இரும்புத்தாது மற்றும் நீர் மின்சக்தி போன்றவை நாட்டின் தொழிற்துறையின் ஆதாரங்களாக உள்ளன. ஐரோப்பிய நாடுகளில்- பரப்பளவில் பெரிய நாடுகளில் ஒன்று மட்டுமல்ல, ஐரோப்பாவின் மக்கள் நெருக்கம் குறைந்த நாடுகளில் இதுவும் ஒன்று. நாட்டின் பாதியளவிற்கும் மேல் பைன் மரக்காடுகள் பரந்துள்ளன.

தலைநகர்- ஸ்டொக்ஹோம். பரப்பு- 4,50,000 ச.கி.மீ.

மொழி- சுவீடிஷ், சமயம்- கிறிஸ்தவம், நாணயம் - டொலர்

முக்கிய நகரங்கள்- ஸ்டொக்ஹோம், கோட்பர்க்.

முக்கிய உற்பத்திகள்- விவசாயம் - பார்லி, கால்நடைகள், ஓட்ஸ், உருளைக்கிழங்கு, கோதுமை.

வனப்பொருட்கள் - பிர்ச், பைன்.

உற்பத்தி - விவசாயக் கருவிகள், விமானம், கார்கள், டீசல் இயந்திரங்கள், உரம், தளபாடங்கள், காகிதம், பிளைவுட், உருக்கு, தொலைபேசிகள்.

கனிமம் - செம்பு, தங்கம், இரும்புத்தாது, தாமிரம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்




முழுப்பெயர் :- பெ.யூட்தேவதர்சன்
கற்கும் பாடசாலை :- யா/ மத்திய கல்லூரி.
கற்கும் தரம :- 8
ஆர்வமுள்ள துறைகள :- தமிழ், விளையாட்டு, கணினி, சங்கீதம்.



முழுப்பெயர் :- கி.காயத்ரி
கற்கும் பாடசாலை :- யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம.
கற்கும் தரம :- 10
ஆர்வமுள்ள துறைகள :- விளையாட்டுத்துறை, பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- யோ.டினேஷ்ஷாந்த்
கற்கும் பாடசாலை :- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.
கற்கும் தரம :- 10
ஆர்வமுள்ள துறைகள :- விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- சோ.நிசாந்
கற்கும் பாடசாலை :- சென்.ஹென்றியரசர் கல்லூரி.
கற்கும் தரம :- 9
ஆர்வமுள்ள துறைகள :- ஓவியம் வரைதல், கவிதை எழுதுதல்.

முழுப்பெயர்:- த.சுகந்தினி
கற்கும் பாடசாலை :- கிளி/பளை மத்திய கல்லூரி.
கற்கும் தரம :- 10
ஆர்வமுள்ள துறைகள :- கதை, கட்டுரை எழுதுதல், விளையாட்டு.

முழுப்பெயர்:- அ.ருமேறியன்
கற்கும் பாடசாலை :- யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
கற்கும் தரம :- 9
ஆர்வமுள்ள துறைகள :- பாட்டுப் பாடுதல், விளையாட்டு, முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:- கா.பிரியதர்சினி
கற்கும் பாடசாலை :- யா/வேம்படி மகளிர் கல்லூரி.
கற்கும் தரம :- 9
ஆர்வமுள்ள துறைகள :- நடனம், சங்கீதம், சித்திரம் வரைதல்.

முழுப்பெயர்:- ப.விஷ்ணுகாந்
கற்கும் பாடசாலை :- யா/ வேலணை மத்திய கல்லூரி.
கற்கும் தரம :- 7
ஆர்வமுள்ள துறைகள :- கல்வித்துறை, விளையாட்டுத்துறை.

# அம்மாவே!



தாலாட்டுப் பாடியே
தங்கத் தொட்டில் மீதிலே
தூங்க வைத்த தாய் மடியே
தூக்கி ஒரு முத்தம் தா....தா

சின்னச் சின்னக் கால்களாலே
சிரித்து விளையாடுவதை
சித்தமுடன் உளம் மகிழ்ந்து
சீருடன் வளர்ப்பீரே

## தெய்வம் நீ

அன்போடு மட்டுமல்ல-நல்ல
அறிவினையும் ஊட்டி எம்மை
அவனியிலே சிறக்க வைத்தீரே
அம்மாவே! தெய்வம் நீயே!!

# இயற்கை

பூமி எங்கணும் மரம்சோலை
இயற்கை தந்த வளமெல்லாம்
வெயில் நேரம் குளிர்ச்சிக்கும்
மழையே பெய்ய உதவிடும்.
இயற்கை தந்த ஒவ்வொன்றும்
மிகவும் உபயோகமானவை.
ஆனால் மனிதன் அவைகளை
அழித்து மாசடைய செய்கிறான்.
மனிதா! இயற்கையை அழிக்காமல்
இயற்கையை அவதானமாக பராமரி!

ஆ.ராம்சூரத்
பருத்தித்துறை

## நாடுகளும் அவற்றின் புனைபெயர்களும்

| | | |
|---|---|---|
| இந்து சமுத்திரத்தின் முத்து | - | இலங்கை |
| ஐரோப்பாவின் போர்க்களம் | - | பெல்ஜியம் |
| இருண்ட கண்டம் | - | ஆபிரிக்கா |
| மரகதத்தீவு | - | அயர்லாந்து |
| ஆயிரம் ஏரிகள் உடைய நாடு | - | பின்லாந்து |
| உலகின் கூரை | - | பமீர் |
| சர்க்கரைக் கிண்ணம் | - | கியூபா |
| ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |

ஆக்கம்:-
ந. ஜசிந்தா
தரம் - 9,
யாழ். யாழ்ப்பாணக் கல்லூரி.

# விடுகதைகளும் விடைகளும்

1. ஆமையில் தீயது எது?
2. மரத்தின் மேல் மரம் அது என்ன?
3. எழுதாத மை என்ன மை?
4. நாம் கொடுத்த நீரை நமக்குத் தருவான் அவன் யார்?
5. ஊத ஊத உருண்டையாவான் அவன் யார்?
6. கால் இல்லை - நடப்பார். கையில்லை - உணவு எடுப்பார். இமை இல்லை - உறங்குவார். அவன் யார்?

றொ.றாயலீனா
யாழ். வல்வை மகா வித்தியாலயம்

1.பொறாமை
2.அன்னாசி
3.தீமை
4.தென்னை இளநீர்
5.பலூன்
6.பாம்பு



1. கூவி அழைப்பான், கூடி உண்ணுவான். அவன் யார்?
2. அவனுக்கு வீடு, மற்றவர்களுக்கு வலை. அது என்ன?
3. கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளிதருவான். அவன் யார்?
4. செம்பு நிறைய சிவப்பு முத்துக்கள். அது என்ன?
5. தூக்கம் வந்தால் தானாகவே மூடும் கதவுகள் அவை எவை?

து.விதுஷன்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

1.காகம்
2.சிலந்தி
3.மெழுகுதிரி
4.மாதுளம்பழம்
5.இமைகள்

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# அறிந்து கொள்ளுங்கள்

- பக்ராவில் உள்ள கோவிந்தசாகர் ஏரிதான் இந்தியாவில் மனிதனால் அமைக்கப்பட்ட ஏரிகளிலேயே மிகப் பெரியது.
- பௌதிகத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற முதல் விஞ்ஞானி சி.வி.இராமன்.
- உலகின் மிக உலர்வான இடமான கலி:போர்னியாவின் டெத் பள்ளத்தாக்கின் மழையளவு ஒன்றரை அங்குலத்துக்கும் குறைவுதான்.
- உலகில் வாழ்ந்த பாலூட்டிகளிலேயே மிகப் பெரியது இன்ட்ரிக் கோதீரியம். இதன் எடை வளர்ந்த ஐந்து யானைகளின் எடைக்கு நிகரானது.
- அரிசிபோ (Arecibo) தான் மிகப்பெரிய ரேடியோ டெலஸ்கோப். இது போர்ட்டோரிக்கோவில் உள்ளது.
- வானவெளியில் மிகவும் ஒளி பொருந்திய நட்சத்திரம் சிரியஸ். இதனை 'டொக் ஸ்டார்' என்றும் குறிப்பிடுவர்.
- எதியோப்பியாவின் பழைய பெயர் அபிஸீனியா.
- தாய்லாந்தின் பழைய பெயர் சயாம்.
- இந்தோனேசியாவில் 70 இற்கும் மேற்பட்ட உயிருள்ள எரிமலைகள் இருக்கின்றன.
- சாதாரண நீரைவிட கடல்நீரில் அதிக அழுத்தம் இருப்பதால் அதன் கொதிநிலை 100° செல்சியசிற்கும் அதிகமாகும்.
- உலகில் மிக நீளமான பாலம் அமெரிக்காவிலுள்ள நியூரிவர் கோர்ஜ் பிறிஜ் ஆகும். அதன் நீளம் 518.2 மீற்றர்.
- சவுதிஅரேபியாவிலுள்ள மன்னர் காலித் விமான நிலையமே உலகில் மிகப் பெரிய விமான நிலையமாகும். இதன் பரப்பளவு 223 சதுரகிலோமீற்றர்.
- மின்னலைக் கண்டு பயப்படுவதை அஸ்ரா போபோபியா என்றழைப்பர்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :........................
கற்கும் பாடசாலை :........................
கற்கும் தரம் :........................
வீட்டு முகவரி :........................
பிறந்த திகதி :........................
ஆர்வமுள்ள துறைகள் :........................

........................ ........................
திகதி ஒப்பம்

........................ ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

பேதமையுள் எல்லாம் பேதமை காதன்மை
கைஅல்ல தன்கண் செயல்.

- திருக்குறள்.

## நமது நோக்கு

### மனித அவலத்தை நோக்கி... !

இதோ, அதோவென்று அமெரிக்காவும், பிரிட்டனும் 'படம் காட்டிக் கொண்டிருந்த' - ஈராக் மீதான தாக்குதல் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இந்தப் போரைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், பல்வேறு நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் மேற்கொண்ட முயற்சிகள் - விழலுக்கு இறைத்த நீராகிவிட - ஐ.நாவின் அங்கீகாரமின்றியே- உலகின் பொலிஸ்காரனான அமெரிக்கா, தனது உற்ற தோழனான பிரிட்டனுடன் இணைந்து போரை ஆரம்பித்துவிட்டது.

உலகின் மிகப்பெரும் பயங்கரவாதியாகவும், பெரும் ஆபத்துக்குரியவராகவும் - ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனைச் சித்திரித்து வைத்துள்ள, அமெரிக்க அரசாங்கமும், அந்நாட்டின் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் - அந்தத் தனிப்பட்ட நபரையும், அவருடன் நெருங்கிய ஐவரையும் குறிவைத்திருப்பதாகக் கூறிக் கொண்டு - பல நூறு விமானங்கள் குண்டு வீசவும், கடலிலிருந்தும், தரையிலிலிருந்தும் ஏவுகணைகள் செக்கன் தவறாமல் சீறிப்பாயவும் - பக்தாத் தீப்பிளம்பாக, ஒரு மனித அவலம் அரங்கேறத் தொடங்கியிருக்கிறது.

அமெரிக்காவுக்கு அல்லது அமெரிக்க ஜனாதிபதிக்கு யார் யாரெல்லாம் பிடிக்காதவர்களோ அல்லது எதிரிகளாகப்படுகின்றனரோ - அவர்கள் உலகிற்கே எதிரிகளாகவும், மனித குலத்துக்கே அபாயமானவர்களாகவும் இருக்கவேண்டுமென்ற, அமெரிக்கா வகுத்துவரும் புதிய உலக ஒழுங்கமைப்பின்படி - ஈராக் மீதான தாக்குதலுக்கு ஐ.நாவும் உலக நாடுகளும் அவசியம் ஆதரவு தரவேண்டுமென்றே அமெரிக்கா தீவிரமாக முயன்றது.

ஆனால் - அமெரிக்காவின் ஆதிக்க விஸ்தரிப்புக்கு என்றைக்குமே முழுமையாகச் செவிசாய்த்து வராத பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளின் ஆதரவின்மையும் - ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானின் பணிந்து போகாத நிலையும் - அமெரிக்காவைத் தனித்தே போரில் குதிப்பதற்கு வழிவகுத்துவிட்டன.

விளைவாக - அமெரிக்க ஜனாதிபதியின் 48 மணி நேரக் காலக்கெடுவிற்குள், அவர் அறிவித்ததுபோல- சதாம் ஹுசைன் 'நாட்டைவிட்டுத் தப்பியோடாததால்'- உலகப் பொலிஸ்காரன் தனது 'கடமையைச் செய்ய' ஆயத்தமாகிவிட்டார்.

உலகின் பல பாகங்களிலும் - ஈராக் மீதான தாக்குதல் ஏற்படுத்தப்போகும் பெரும் மனித அவலத்திற்கு எதிராக உரத்துக் குரல்கள் எழுந்தபோதும், அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு - தனது சொற்கேளாத சதாமைத் தண்டிக்கும் நோக்குடனும், 1991 இல் வளைகுடாவில் தந்தை புஷ் நடாத்திய 'பாலைவனப் புயலுக்குப்' பின்னர் அமெரிக்கா தயாரித்து வைத்திருக்கும் ஆயுதங்களையும் போர் நுட்பங்களையும் பரீட்சித்துப் பார்க்கும் இலக்குடனும் - மகன் புஷ் தனது அதிரடி நடவடிக்கையில் குதித்துவிட்டார்.

போர் ஆரம்பித்த இரண்டு நாட்களில் மட்டும் ஆயிரக்கணக்கான விமானக் குண்டுகளாலும், ஏவுகணைகளாலும் சல்லடை போடப்பட்டிருக்கும் பக்தாத் நகரில்- நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியிருப்பதாகவும், பல நூறு பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை - உணவுக்கும், அத்தியாவசியத் தேவைகளுக்குமாக மக்கள் அல்லற்படுவதோடு - தப்பிச் செல்லும் வழிகளை அயலிலுள்ள நாடுகள் அடைத்திருப்பதால் - மக்கள் ஆங்காங்கே பாலைவனங்களிலும், பாதுகாப்பானதெனத் தாம் கருதிக் கொள்ளும் இடங்களிலும் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இரு நாட்களிலேயே இந்த அவலம் என்றால் - இனி அமெரிக்கப் படைகள், ஈராக்கினுள் நுழையத் தீவிரங்காட்ட, நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்றே மனிதநேய நிறுவனங்கள் கவலை தெரிவிக்கின்றன.

புஷ் ஒருபுறம் இந்த அவலத்துக்குக் காரணம் என்றால் - மறுபுறம், விடாக்கண்டனாக - ஈராக்கைத் தனதும், தனது குடும்பத்தினதும் உரிமையுடையதாகக் கொண்டு - அப்பாவி மக்களின் அழிவுக்கு சதாம் ஹுசைனும் முக்கிய பங்காளியாகின்றார்.

ஈராக்கைத் தொடர்ந்தும் பதற்றம் மிக்க யுத்த பூமியாகத் தக்க வைப்பதற்கும் தனது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் சதாம் ஹுசைன் மேற்கொண்ட முயற்சிகளும் நியாயமானவை என்று எவரும் கூறிவிடமுடியாது.

எது எப்படியிருந்தாலும் -

ஒரு சர்வதேச அரசியலின் ஆதிக்க நகர்வுக்கு - ஈராக்கில் நடந்துவரும் அவலம் - நாகரிகமான உலகுக்கு ஏற்புடையதல்ல, மனிதநேயத்திற்கு முற்றிலும் முரணானது என்பதையே உறுதியாகக் கூறமுடியும்.

# பொதுநலவாய திட்டமிடல் குழு யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பொதுநலவாய நாடுகளின் ஒன்றியச் செயலகத்தின் இலங்கைக்கான திட்டமிடல் குழுவொன்று நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

யாழ்.வந்த 4 பேர்கொண்ட இக்குழுவினர், யாழ்.செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் பணிமனையில் கலந்துரையாடலை நடாத்தினர்.

இக்கலந்துரையாடலில் முக்கியமாக- சமாதானம் நிலைத்து நிற்க எந்தவகையில், எவ்வகையான உதவிகளை மேற் கொள்ளவேண்டும் என்பதுபற்றி ஆராயப்பட்டது. அத்துடன், பொது அமைப்புக்களை ஒன்றிணைத்து, ஓர் சமூக அமைப்பினை உருவாக்க வேண்டுமெனப் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். தற்போது ஏற்பட்டுள்ள சமாதான காலத்தில் - யாழ்.குடாநாட்டில் நிலைமைகள் எவ்வாறுள்ளது என்பது பற்றியும், சமாதான முன்னெடுப்பிற்கு எவ்வகையான இடையூறுகள் ஏற்படுகின்றன என்றும் இவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

இக்குழு நேற்றுமாலை சாவகச்சேரி பிரதேசத்தைப் பார்வையிடச் சென்றதுடன், அங்குள்ள பாடசாலைகளையும் பார்வையிட்டது. அடுத்து கிளிநொச்சி சென்று அங்குள்ள நிலைமையையும் பார்வையிடத் திட்டமிட்டுள்ளது.

செயலகத்தில் நடந்த கலந்துரையாடலில் பொதுநலவாய நாடுகளின் ஒன்றியப் பிரதிநிதிகளான - ஆர்.பி.சூடின், டாக்டர் வெட்கோஸ், ரிச்சர்ட் கொன்றே, எஸ்.சர்புதீன் ஆகியோரும், பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்.வரதராசா, தென்மராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் வீரசிங்கம், தலைமைப்பீட உதவி அரசஅதிபர் வீ.வீரபத்திரர், பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சிறில், விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பொதுநலவாய ஒன்றியத் திட்டமிடல் குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடல்

# சமஷ்டி அமைப்புக்கான நிதி ஜப்பான் பேச்சுகளில் ஆய்வு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(ரோக்கியோ)

சமஷ்டி அமைப்புக்கான நிதி ஆதாரம் பற்றி நாங்களும், விடுதலைப் புலிகளும் சில உடன்பாடுகளுக்கு வந்திருக்கிறோம். சமஷ்டி அமைப்பின் சகல அலகுகளுக்கும் தேவையானளவு நிதி அதிகாரங்களை வழங்கவேண்டும். நிதி ஆதாரங்கள் இல்லாத சூழலில், எவ்வளவுதான் அரசியல் அதிகாரங்கள் தந்தாலும் - அந்த அதிகாரங்களைக் கையாள்வதற்குக்கூட நிதி ஆதாரங்கள் தேவை. இதைவிட - மத்தியில் அதிகாரங்களைப் பகிர்வது பற்றியும் பேசினோம் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுக்கள் பற்றித் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் பேசும்போது -

மத்திய அரசின் நிதிக்கொள்கையை வகுப்பதில், சமஷ்டி அமைப்பின் அலகுகளுக்குக் கருத்துக்கூறும் அதிகாரம் இருக்கவேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது என்றார் பீரிஸ்.

ரோக்கியோ உதவி வழங்கும் மாநாடு பற்றிக் குறிப்பிட்ட அவர்,

ரோக்கியோ மாநாடு வெற்றிபெறுவதற்கு - அமெரிக்கர்கள் திரைக்குப் பின்னால் வலுவாகச் செயற்பட்டு வருகின்றார்கள். அடுத்தவாரம் வொஷிங்ரன் சென்று - ரிச்சர்ட் ஆர்மிரேஜ், கிறிஸ்ரினா ரொக்கா ஆகியோரைச் சந்தித்து, பேச்சு நிலவரம் பற்றி எடுத்துக் கூறவிருக்கிறேன் என்றார். (க)

# சமாதான உருவாக்கத்தில் ஊடகவியலாளருக்கு பெரும்பங்கு!

## அமைச்சர் இம்தியாஸ் தெரிவிப்பு

புரிந்துணர்வு உடன்படிக்கையை மக்கள் மத்தியில் கொண்டுசென்று அதன் வெற்றிக்கு ஊடகவியலாளர்கள் பெரும் பணியாற்றியிருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

மத்துகமவில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதில் ஊடகவியலாளர்களுக்குப் பெரும்பங்கு உள்ளது. ஊடகவியலாளர்கள் நிரந்தரமான தீர்வுக்கு ஒத்துழைக்கவேண்டும்.

சமாதான முயற்சிகளைக் குழப்பமுனையும் எதிர்க்கட்சிகள், தாம் ஆட்சிக்கு வந்தால் ஊடகங்கள்மீது கடும் நட்வடிக்கை எடுக்கவுள்ளதாக மிரட்டியிருக்கின்றன. இந்தக் கட்சிகள் ஆட்சியைப் பிடித்தால் ஊடக சுதந்திரம் பாதிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பத்து இலக்கத் தொலைபேசி முறை ஒக்ரோபர் முதல் நடைமுறைக்கு!

பத்து இலக்கத் தொலைபேசி இலக்கமுறை எதிர்வரும் ஒக்டோபர் மாதம்முதல் நாடுமுழுவதிலும் நடைமுறைக்கு வரும் என்று தொலைத்தொடர்புச் சீராக்கல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதிகரித்துவரும் தொலைபேசிப் பாவனையாளர்களின் நலன்கருதிப் பத்து இலக்கத் தொலைபேசி இலக்கமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பரீட்சார்த்தரீதியில் இந்த இலக்கமுறை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

நாடுமுழுவதும் பத்து இலக்க நடைமுறை ஒக்ரோபரில் அமுலுக்கு வரும். இதன்மூலம் தற்போது 8 சதவீதமாகவுள்ள தொலைபேசிப் பாவனையாளர்களின் தொகையை - 30 சதவீதமாக இருவருடங்களில் அதிகரிக்கமுடியும் என்றும் தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# இரகசியப் பொலிஸாரால் எனது பாதுகாப்புக்கு ஆபத்து!

## ஜனாதிபதி சந்திரிகா உள்துறை அமைச்சருக்கு கடிதம்

(கொழும்பு)

பொலிஸாரின் நடவடிக்கைகளால் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிமுதல் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே, அவர் - தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டினை வைத்துக்கொண்டு தமது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இரகசியப் பொலிஸார் தொல்லைகள் ஏற்படுத்திவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


மூன்று வருடங்களுக்கு முன் பிளாஸ்ரிக் கதிரைகளைக் களவாடியதாகக் கூறி, பொலிஸார் - மூன்று பாதுகாப்பு அதிகாரிகளைக் கைது செய்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியதோடு, தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தொந்தரவு கொடுக்கும் நடவடிக்கையை பொலிஸ் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளதா? எனவும் ஜனாதிபதி கேள்வியெழுப்பியுள்ளார்.

# சதாமை இலக்கு வைத்திருக்கும் தாக்குதல்; அமெரிக்காவின் மெய்யான இலக்கு என்ன?

**கே. ரீ. கணேசலிங்கம்**

உலகளாவிய எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஈராக் மீது அமெரிக்க- பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் தாக்குதலை ஆரம்பித்துவிட்டன. போருக்கான அடிப்படைத் தயார்ப்படுத்தல் பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்டபோதும், தற்போதுதான் போர் ஆரம்பமாகியுள்ளது. போர் தொடங்கிய ஒரு சில மணி நேரத்தில் ஜனாதிபதி புஷ்ஷும், ஜனாதிபதி சதாம் ஹுசைனும் மாறிமாறி தமது எச்சரிக்கைகளையும், தாக்குதல் அவசியத்தையும் வெளியிட்டுள்ளனர். ஈராக் மக்களும் - அமெரிக்க மக்களும், உலக மக்களும் இவற்றைக் கூர்ந்து கவனித்திருப்பார்கள். இவ்வாரம் போரின் ஆரம்ப நாட்கள் எப்படி அமையவுள்ளது என்பதை நோக்குவோம்.

தாக்குதல் ஆரம்பித்தபோது விழுந்து நொருங்கிய அமெரிக்க ஹெலி



போரின் முதல் நடவடிக்கையைப் பற்றி ஜனாதிபதி புஷ் வெளிப்படுத்தும்போது, ஈராக் போர் குறுகிய காலத்திற்குள் முடிவுக்கு வராது என்றும், மக்களின் உணர்வுகளையும், விருப்புக்களையும் பாதுகாப்பதற்காகவே போர் தொடங்கப்பட்டது எனவும் கூறினார்.

பதிலுக்குச் சதாம், போரில் ஈராக்கிய மக்கள் வெற்றி பெறுவார்கள் என்பதுடன், இஸ்லாத்துக்கு எதிரான போர் இது என்பதையும் கூறியிருந்தார். இருவருமே மக்களின் நலனுக்கான போர் என்றே கூறுவதைக் காணமுடிகின்றது.

முதல்நாள் போரில் அமெரிக்க ஆளும் தரப்பு எதிர்பார்த்த இலக்கில், சதாம் ஹுசைன் இல்லை என்பதே அவர்களின் ஏமாற்றமாக அமைந்துள்ளது. அமெரிக்காவின் குறூஸ் ஏவுகணைகளின் பிரதான இலக்கு - பக்தாக் என்பதும், அதில் சதாம் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆனால், சதாம் பல எதிரிகளை எதிர்கொண்ட ஆட்சியாளன் என்பதனால், ஏவுகணைகளுக்கு இரையாகாது தப்பிவிட்டார். எனவே, போர் நீடிக்கப் போகின்றது என்பது தெளிவான உண்மை என்பதனை அமெரிக்க ஆளும் தரப்பு எண்ணியுள்ளதையே புஷ் வெளிப்படுத்தியுள்ளார். சதாமையும், அவரது முதன்மைப் படையையும் அழித்துவிட்டு- பின் குறுகிய நாட்களுக்குள் ஈராக்குக்குள் புகுந்து மீதிப்பகுதியைக் கைப்பற்றுவதே அமெரிக்கரின் நோக்கமாக இருந்தது. அது கணிசமாகத் தோல்வியடைந்துவிட்டது. எனவே, தற்போது மாற்று வழிமுறை பற்றி பென்ரகன் ஆலோசித்து வருகின்றது.

அமெரிக்க- பிரிட்டிஷ் கூட்டுப் படையின் தாக்குதல் ஏற்கனவே பின்பற்றப்பட்டதுபோல் அல்லாது - மூன்று பிரதான முனைகளை மையமாகக்கொண்ட நகர்வுக்கான திட்டமிடலாக அமைந்துள்ளது. ஈராக்கின் வடக்கு, தெற்கு, மேற்கு பகுதிகளை மையமாகக்கொண்ட இராணுவக் குவிப்புகளை மேற்கொண்டிருந்தது. முதலில் குவைத் பகுதியிலிருந்து ஈராக்கின் எல்லைகளை நோக்கிப் படைகளை நகர்த்தி வருவதாகவும், பிரிட்டிஷ் படைகளுடன் கூட்டாக அமெரிக்கத் துருப்புக்கள் நகர்வதாகவும் தெரியவந்துள்ளது. ஏனைய இரண்டு பகுதிளிலிருந்து நகர்வு நிகழவில்லை என்பதுடன், ஈரானை அண்டிய ஈராக்கின் எல்லைப் பகுதிகளில் எத்தகைய தாக்குதல் உத்தியும் கையாளப்படாதுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனுடன் முதல் தாக்குதல் ஆயிரக்கணக்கான ஏவுகணைகளைக் கொண்டதாக இருந்ததுடன், இது அமெரிக்காவின் தாக்குதல் யுக்தி எனவும் கூறப்படுகின்றது. ஈராக்கைச் சூழவுள்ள தமது இராணுவத் தளங்களிலிருந்து மழை போன்று ஏவுகணைத் தாக்குதலை நிகழ்த்திவிட்டுப் பின்பு விமானத் தாக்குதலை ஆரம்பிப்பதே அமெரிக்காவின் திட்டமிடலாகவுள்ளது. இதனை ஆப்கானிஸ்தானில் நிகழ்த்தி அது வெற்றி கண்டது. அதே பாணியில் ஏவுகணைத் தாக்குதலை நிகழ்த்தி, எதிரியின் உளவியலையும், அவன் சார்ந்துள்ள மக்களையும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு,



ஈராக் மீது ஆட்லறி தாக்குதல் நடத்தும் பிரிட்டிஷ் துருப்புக்கள்

பின்பு திணறடிக்கும் விதத்தில் விமானத் தாக்குதலை நிகழ்த்துவதும் இலகுவான தாக்குதல் வழிமுறையாக அமெரிக்கா கருதுகின்றது. அவ்வாறு தாக்குதல் நிகழ்த்துவதனால் அமெரிக்காவுக்கு அதிக இலாபம் உண்டு என்பது கவனிக்கத்தக்கது.

குறிப்பாக அமெரிக்கப் படைகள் கொல்லப்படுவதனை - அமெரிக்க மக்கள் ஏற்கமாட்டார்கள். அவ்வாறான நிகழ்வு ஏற்பட்டதே வியட்நாம் பிரதேசத்திலிருந்து அமெரிக்கப் படைகளை பின் வாங்கச் செய்தது என்பது ஆட்சியாளர்களுக்கு நல்ல பாடமாக அமைந்திருக்கும். எனவே, அதனைத் தவிர்ப்பதையே புஷ் நிர்வாகமும் விரும்புகின்றது. அதனால் நேரடியாகச் சமர் தொடங்குவதற்கான வாய்ப்பினை எதிரிக்கு இல்லாது செய்வதன் மூலம் இலக்கை இலகுவாக அடையலாம் என்பது அமெரிக்காவின் திட்டமிடலாகவுள்ளது. அப்படியான வாய்ப்பு ஏற்படும் வரை ஏவுகணைத் தாக்குதலும், விமானத் தாக்குதலும் மாறிமாறி நிகழக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

என்றாலும், தரைவழித்தாக்குதலைத் தீவிரப்படுத்தும் வாய்ப்புக்களும் இல்லாமலில்லை என்றே கூறலாம்.

---

# 'சினி யாத்ரா' இலங்கைத் திரைப்பட விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்!

யாழ். பல்கலைக்கழகத்தில் "சினி யாத்ரா" எனும் தலைப்பிலான இலங்கைத் திரைப்படவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் திரிகோண நிலையமும், யாழ்பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகும் இணைந்து இந்த விழாவினை ஏற்பாடு செய்துள்ளன.

சர்வதேச விருதுகள் பெற்ற ஒன்பது படங்கள் இந்தத் திரைப்பட விழாவில் காண்பிக்கப்படவுள்ளன. இதில் எட்டு சிங்களமொழிப் படங்களாகும். அனைத்துப் படங்களும் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படும்.

லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் நெறியாள்கை செய்த நிதானய (புதையல்), 26 ஆம் திகதி 4 மணிக்கும் இரவு 7 மணிக்கும்,

அசோகா ஹந்தகம நெறியாள்கை செய்த சாந்த கின்னரி (நிலவுப் பெண்), 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கும் இரவு 7 மணிக்கும்-

பிரசன்னா விதானகே நெறியாள்கை செய்த புரஹந்த கலுவரா (பூரணை நிலவில் இருள்), 28 ஆம் திகதி மாலை 4 மணிக்கும் இரவு 7 மணிக்கும்,

சுமித்ரா பீரிஸ் நெறியாள்கை செய்த சாகர ஜல (மணல் மேல் எழுத்து), 29 ஆம் திகதி காலை 10.30 மணிக்கும் பி.ப 2.30 மணிக்கும்-

தர்மசேன பத்திராஜ நெறியாள்கை செய்த மத்துயம் தவச (எதிர்காலத்தில் ஏதோவொரு நாள்), பொன் மணி ஆகிய இரு திரைப்படங்களும், 29 ஆம் திகதி 10.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும்,

வசந்த ஒபேசேகர நெறியாள்கை செய்த தீர்த்த யாத்தரா (தீர்த்த யாத்திரை) 30 ஆம் திகதி காலை 10.30 மணிக்கும்,

2.30 மணிக்கு தர்மசிறி பண்டார நாயக்க நெறியாள்கை செய்த பவதுக்க (வாழ்தலின் துன்பம்), மாலை 6 மணிக்கு இவருடைய பவகர்ம (பவதுக்க படத்தின் இரண்டாம் பகுதி) திரைப்படமும் இந்த திரைப்படவிழாவில் காண்பிக்கப்படவுள்ளன.

மறுநாள் திரைப்படங்கள் தயாரித்த ஐந்து இயக்குநர்களும், ரசிகர்களுடன் கலந்துரையாடவுள்ளனர்.

# காலாவதியான பொருட்கள்; விற்பனைக்கு எதிராக நடவடிக்கை

விற்பனைத் திகதி முடிவுற்ற பொருட்களை விற்கும் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க மக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என பொதுச்சுகாதாரப் பகுதியின் பிரதம பரிசோதகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டிற்கான தரை வழிப்பாதை திறந்த பின்னர் தென்னிலங்கை வர்த்தகர்களினால் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருட்கள் நகரில் நிரம்பி வழிகின்றன.

பொருட்களை வாங்கும் மக்களே விற்பனைத் திகதியைச் சரிபார்த்து வாங்க வேண்டும். காலாவதியான பொருட்களை இனம் கண்டால் - தமக்கு அறிவித்தல் தந்தால் நாம் உரிய நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் இது போன்ற பொருட்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ரா,சு)

# குறைபாடுகளோடு இயங்கும் மந்திகை மருத்துவமனை

(யாழ்ப்பாணம்)

மந்திகை மருத்துவமனையில் நோயாளர் விடுதிகளில் பலகுறைபாடுகள் நிலவுவதாக நோயாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

நோயாளர்களின் பாவனைக்குத் தேவையான நீர் குழாய்களில் ஒழுங்காக வருவதில்லை எனவும், மலசல கூடங்கள் ஒழுங்கு முறையில் சுத்தம் செய்யப்படுவதில்லை என்றும் பொருத்தப்பட்டுள்ள மின் விசிறிகள் செயற்படமுடியாத நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், நோயாளர்கள் உபாதைகள் பலவற்றை அனுபவிக்க நேரிடுகிறது.

இக்குறைபாடுகள் தொடர்பில் பிரான்ஸ் நாட்டு மருத்துவ குழுவினாலும் பலமுறை வைத்தியசாலை நிர்வாகத்துக்குச் சுட்டிக்காட்டியும் எந்தவித பலனும் கிட்டவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வெளிவாரிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு அலகினால் நடாத்தப்படும் 2001 ஆம் ஆண்டிற்கான வணிகமாணி பகுதி ஒன்றுக்கான பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 25 ஆம் திகதி முதல் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெறுவதுடன், மேலதிகமான தகவல்களைப் பெற 3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வெளிவாரிப் பரீட்சைகள் அலகு அறிவித்துள்ளது.

# சூதாட்டத்தில் ஈடுபட்டோர் பொலிஸாரால் கைது!

(யாழ்ப்பாணம்)

பணம் வைத்துச் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

துன்னாலை கிழக்கில் பொது மக்கள் சிலர் கொடுத்த தகவலையடுத்து, நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஐவரையும் தலா 1000 ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டுமென உத்தரவிட்ட நீதிவான், சூதாடப் பயன்படுத்திய பணத்தைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (34)

## நிக்கொட் திட்டத்தில் வீடுகள் புனரமைப்பு

யாழ்.மாவட்டத்தில் நிக்கொட் திட்டத்தின் கீழ், சேதமுற்ற பல வீடுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதன்படி தற்போது நாவாந்துறை, கொட்டடி ஆகிய பிரதேசங்களில் சேதமடைந்த இருநூறு வீடுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (லி)

## 300 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவுகளில், இதுவரை 300 குடும்பங்களுக்கான கொடுப்பனவினை வழங்குவதற்கான காசோலைகள் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஏனையவர்களுக்கு மிக விரைவில் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லி)

# தொண்டராசிரியர் மறியற் போர் திங்கள் முதல் நடத்த ஏற்பாடு

யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் நாளை மறுதினம் திங்கட் கிழமையன்று ஐந்து வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதன் அடுத்த கட்டமாக 26 ஆம் திகதி புதன்கிழமை திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சின் பணிமனையின் முன்பாக மறியல் போராட்டம் நடாத்துவதற்கு இவர்கள் செல்லவுள்ளனர்.

இந்நடவடிக்கைக்கு சகல கல்வி வலய அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்களையும் ஆதரவு வழங்கும்படி தொண்டராசிரியர் சங்கத்தினர் கோரியுள்ளனர். (110)

## வைத்தியர் இடமாற்றம்


உடுப்பிட்டி பற்சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றி வந்த பல் வைத்தியர் சு.எழிலரசி இம்மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள பற்சிகிச்சை நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (116)

ICC Cricket World Cup South Africa 2003

# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003

Cricket World Cup 2003

# அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே...!



சனத் - நான் நிறையவே செய்திருக்கிறேன்.

உலகக் கிண்ணக் கனவு கலைந்து இலங்கை அணி நாடு திரும்புகிறது. பொதுவாக வெற்றி பெறாத அணிகளின் தலைவர்கள் முதலில் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவது ஒரு கிரிக்கெட் வாய்ப்பாடு.

இந்தவகையில் தற்போது இலங்கை அணியைப் பொறுத்தும் அந்தச் சலசலப்பு தொடங்கிவிட்டது. இலங்கை திரும்பியதும், இலங்கையின் அணித் தெரிவாளர்களுடன் சனத் ஜயசூரிய தனது எதிர்காலம் பற்றிக் கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏலவே அவுஸ்திரேலிய அணியுடன் அரை இறுதிப்போட்டியில் இலங்கை அணி தோல்வி கண்டதும், இலங்கையின் 2003 உலகக்கிண்ணப் பிரயாணம் முடிவுக்கு வந்தது. அந்த ஆட்டம் பொறுத்து எந்தக் கிரிக்கெட் ரசிகரும் மகிழ்ச்சிகொள்ள இயலாது. என்னதான் துடுப்பாட்டத்திற்கு சாதகமற்ற களமானாலும், அதனை அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்களைக் கவிழ்த்து இலங்கை நிரூபித்தாலும் தாம் துடுப்பெடுத்தாடும் போது இந்தளவிற்கு, நிலை தாழ்ந்து தோற்கவேண்டிய அவசியம் என்ன வந்தது என்று ரசிகர்கள் குழம்பிப் போனார்கள்.

இந்த நிலையில் சனத்துக்கு சங்கடங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதுதான். இந்தநிலையில் மூவர் கொண்ட தெரிவுக்குழுவினர் சனத்துடன் அவரின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கலந்துரையாட இருக்கின்றனர்.

இந்த அணுகுமுறை வித்தியாசமானதாக இருக்கப் போகின்றது. சனத் தொடர்ந்தும் அணித் தலைமையை விரும்புகிறாரா, அல்லது தொடர்ந்தும் தனது துடுப்பாட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தும் அணி வீரராக இருக்க விரும்புகிறாரா என்பதை அறிவதே சந்திப்பின் நோக்கம். உண்மையில் ஷோன் பொல்லக் அல்லது வக்கார் யூனுசுக்கு ஏற்பட்ட கதி சனத்துக்கு ஏற்படவில்லை என்பது மகிழ்ச்சிக்குரியது. தெரிவாளர்களும் பாராட்டுக்குரியவர்கள்.



சனத், ஹசான் - நாங்கள் தொடர்வோமா, இல்லையா?

1999 உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்பு அர்ஜுன ரணதுங்கவிடம் இருந்த தலைமை சனத்திடம் கைமாறியது. அதிலிருந்து இன்று வரை சனத், திறமையும் செல்வாக்கும் சிறப்பாகக் கண்ணியமும் மிக்க அணித்தலைவராகவே இனங்காணப் பட்டுள்ளார் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.

இதற்கிடையில், றொமேஷ் களுவிதாரண, திலகரட்ண, தில்ஷான் ஆகியோர் சார்ஜாவிற்குப் போகக்கூடும் என்று கருத்துக்களும் பரவியுள்ளன. எதுவானாலும் சனத்துடன் கலந்துரையாடிய பின்பே அணித்தலைமை பற்றியும், பொதுவில், சகலரும் தென்னாபிரிக்காவில் இருந்து திரும்பிய பின்னரே, ஏனைய விடயங்கள் தீர்மானிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் ரசிகர்களைப் பொறுத்த வரையில், எந்த ஒரு கோணத்தில் இருந்து பார்த்தாலும் சனத் தலைமைப்பதவியிலிருந்து நீங்கவோ - நீக்கப்படவோ வேண்டிய சூழ்நிலை எதுவும் ஏற்படவில்லைப் போலவே தெரிகிறது.

ஏனெனில், சனத் அப்படியான பாவம் எதையும் புரிந்துவிடவில்லை. எனவே - சனத் தலைமையைத் தொடரவேண்டும். எனினும், மாபெரும் சுற்றுப்போட்டித் தோல்விக்குப் பிறகு அணித்தலைவரை மாற்றத் தான்வேண்டும் என்ற கிரிக்கெட் உலகச்சட்டம் சனத்தையும் பாதித்தால் யார்தான் என்ன செய்ய முடியும். **SANATH - IS - SANATH.**

**- நிர்மலன்.**

---

# பார்த்த ஞாபகம் இல்லையோ?

**பா**கிஸ்தான்- உலகிற்கு உன்னத கிரிக்கெட் வீரர்களை எப்பொழுதும் தந்துவரும் நாடு. ஆனால், ஏதோ ஒரு நோய் நெடுங்காலமாகவே இநத நாட்டின் அணியைப் பீடித்து வருவது ஏனென்றே தெரியவில்லை. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளின் அணித் தெரிவின்போதே பல அபிப்பிராயபேதங்கள் இருந்தன.



அசார் சொல்வது - றஸாக் உனக்கு வாழ்த்துக்கள்.

பக்குவமடையாத, ஓய்ந்த, முதிர்ந்த கிரிக்கெட் வீரர்களை ஒன்றிணைத்த இரண்டுங்கெட்டான் அணி ஒன்று என்று விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இன்று, முதல் சுற்றிலேயே வெளியேறிய பாகிஸ்தான் அணி, ஈவுஇரக்கமில்லாமல் வெட்டிச் சாய்க்கப்பட்டிருக்கிறது. இங்கும் அமீர் சொகெய்ல் அடக்கி வாசிக்கிறார். மூத்த வீரர்களைக் குறைகூற விரும்பாத அவர், இளமை அணியில் ஊஞ்சலாட வேண்டியது தவிர்க்கமுடியாதபோது முதுமை ஓய்வுபெறவேண்டும் என்கிறார்.

ஆனால், முதுமை மீண்டும் களமாகும் சந்தர்ப்பங்கள் இல்லாமலும் இல்லை என்கிறார். ஒரு சுற்றுப் போட்டி உவப்பாக இல்லாததால், எல்லோரையும் ஓரங்கட்டுவது தவறானதென்று கூறும் தெரிவாளர் தலைவர் அமீர் சொகெய்ல் கைவைத்துள்ளவர்கள் யார் யார்?

அணித்தலைவர் வக்கார் யூனுஸ், வாசிம் அக்ரம், சயீட் அன்வர், இன்சமாம் உல் ஹக், அசார், சக்லெய்ன் முஷ்டாக், சொஹெய்ப் அக்தர், சயீட் அப்ரீடி. பாகிஸ்தான் அணி அப்படியே வெறிச்சோடிப் போனமாதிரித் தெரிகிறதல்லவா?

நாங்கள் பரீட்சார்த்தமாகவாவது இளம் இரத்தத்தை அணியில் பாய்ச்சுவதைச் செய்திருக்க வேண்டும். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அதனைச்செய்ய வேண்டும். அதுவே இப்பொழுது நடைபெறுகின்றது என்கிறார் அவர்.

அவர் இன்னொன்றையும் கூறுகிறார். இளம் இரத்தங்கள் எந்தளவில் சர்வதேசக் கிரிக்கெட் தரத்தைக் கொண்டுள்ளன, அதைத் தக்கவைக்கும் ஆற்றல் கொண்டன என்பது, அவர்களின் செயற்பாட்டின் மூலந்தான் நிரூபிக்கப்படவேண்டும். அதுவே இப்பொழுது நடைபெறுகிறது. இதனால் மூத்த வீரர்களின் காலம் முடிந்துவிட்டது என்பதல்ல கருத்து என்றும் கூறுகிறார்.



வக்கார், அக்தர் - மீண்டும் வருமா சந்தர்ப்பம்?

புதிய அணி சார்ஜா செல்லும் போது, ரசீட் லத்தீப் (விக்கெட் காப்பாளர்) அணித்தலைவராக இருப்பார். ரசீட் லத்தீப் தனது செயற்பாட்டுக்கு நூறு வீத சுதந்திரம் இருக்கவேண்டும் என்று கேட்டுள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதற்குச் சம்மதித்துள்ளது.

அணியின் உபதலைவர் யூசுப் யொகானா மற்றும் தௌபீக் ஒமர், மொகம்மட் ஹபீஸ், சலீம் எலாஹி, மிஸ்பா உல் ஹக், யூனிஸ் கான், நவீட் லத்தீப், பைசால் இக்பால், அப்துல் ரசாக், நவீட் உல் ஹசன், சொஹெய்ப் மாலிக், மொகமட் சமி, உமர் குல், டேனிஸ் கனேரியா, மொகமட் சாகிட் என்று வரிசை நீள்கிறது. பாகிஸ்தான் நிறைந்த கிரிக்கெட் வளம் கொண்டது. எனவே, ரசிகர்கள் சார்ஜாவில் சுற்றுப்போட்டிகள் நடந்தால்?? இவர்களின் பரிமளிப்பைக் கண்டு ரசிக்க ஆவலாக இருக்கிறார்கள்.

**- ஜோசப் கிருஷ்ணா.**

## யாழ். அணிகள் கொழும்புக்கு!

றோயல் கல்லூரியின் அனுசரணையுடன் நடைபெறவிருக்கும் நான்கு முனை ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ள, யாழ்ப்பாணத்திலிருந்து புனித.பத்திரிசியார் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, பரி.யோவான் கல்லூரி என்பன கொழும்பு செல்கின்றன.

ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

24 ஆம் திகதி - 1. றோயல் **VS** யாழ்.மத்திய கல்லூரி
2. பரி.யோவான் **VS** புனித.பத்திரிசியார் கல்லூரி

25 ஆம் திகதி - 1. றோயல் **VS** பரி.யோவான் கல்லூரி
2. யாழ்.மத்திய கல்லூரி **VS** புனித. பத்திரிசியார்

26 ஆம் திகதி - 1. றோயல் **VS** புனித. பத்திரிசியார் கல்லூரி
2. பரி.யோவான் **VS** யாழ். மத்திய கல்லூரி

28 ஆம் திகதி - இறுதியாட்டம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஆயுத உதவியால்...

மேலதிக விபரங்களை தற்போதைக்கு நாம் சொல்லவிரும்பவில்லை. பேச்சுக்களின் முன்னேற்றம் பற்றி ஒட்டுமொத்தமாகத்தான் பார்க்க வேண்டும்.

### புலிகளின் உறுதிதான் அமைதியைக் காக்கிறது

கடந்த 6 மாதங்களில் 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. இதில் மூன்று பரிமாணங்கள் உள்ளன. ஒன்று போர்நிறுத்தம், இரண்டாவது புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற மனிதாபிமானப் பிரச்சினைகள். மூன்றாவது அரசியல் விவகாரம்.

இந்தப் போர் நிறுத்தத்தை எடுத்துக்கொண்டால், கடந்த ஒரு வருடமாகப் போர் நிறுத்தம் பேணப்படுகின்றது. வட-கிழக்கில், அத்துடன் இலங்கை பூராவும் அமைதி பேணப்படுகின்றது. சில சம்பவங்கள் நடந்தாலும் போர் நிறுத்தக் கட்டுப்பாடு குலையவில்லை. விடுதலைப் புலிகள் மிகவும் நிதானமாகவும், மிகவும் பொறுமையுடனும் இந்தப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். எத்தனையோ ஆத்திரமூட்டும் சம்பவங்கள் நடந்தபோதும், போர் நிறுத்தத்தை மீறாது, அமைதியைப் பேணிப் பேச்சுவார்த்தைகளில் ஒழுங்காகப் பங்குபற்றி வருகின்றனர். விடுதலைப் புலிகளின் இந்த உறுதியான நிலைப்பாட்டால்தான் தென்னிலங்கையில் கூட அமைதி நிலை காணப்படுகின்றது.

அங்கு பொருளாதார மேம்பாட்டுக்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. உல்லாசப்பயணத்துறை போன்ற விடயங்களில் முன்னேற்றம் காணப்படுகின்றது.

மற்றது, சிங்கள மக்கள் நிம்மதியாக, அமைதியாக அங்கு வாழக் கூடியதாக இருக்கின்றது.

### அமைதி வந்தாலும் நிம்மதி வரவில்லை

எம்மைப்பொறுத்தவரை - இந்த ஒரு வருடகாலத்தில் அமைதி நிலவுகின்றது, இயல்புநிலை தோன்றவில்லை. யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரம் படைகள் சிறிய பூகோளப் பகுதியை ஆக்கிரமித்திருப்பதால், மக்கள் இப்போதும் நிம்மதியின்றி வாழ்கின்றனர்.

பத்து லட்சம் மக்கள் தமது சொந்த வீடுகள், சொந்த கிராமங்கள், சொந்தக் குடியிருப்புக்களுக்குத் திரும்பமுடியாமல் இருக்கிறார்கள். ஏனென்றால், இவர்களின் பிரதேசத்தில் இப்போது இராணுவம் ஆக்கிரமித்திருக்கிறது.

உயர் பாதுகாப்பு வலயம் மட்டுமல்ல, அதன் வெளியிலும் இராணுவ ஆக்கிரமிப்பு இருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் கடந்த பேச்சுக்களின்போது எடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், அவர்கள் எங்களுக்குச் சொல்வது- சீக்கிரமாகச் செய்வோம். அப்படியான திட்டம், காலவரையறை போட்டிருக்கிறோம், நம்பியாரின் அறிக்கை வருமென்று சொல்கிறார்கள். இப்படியாக இந்தப் பிரச்சினைகள் இழுபடுகிறதே தவிர, இந்த மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பாததினால் தொடர்ந்த அவல நிலையும், இயல்புநிலை தோன்றாத சூழ்நிலையும் உள்ளன.

ஆனாலும் ஆக்கபூர்வமான சில அம்சங்களில் ஒன்றாக - பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்பட்டுள்ளது. இதனால், அத்தியாவசியப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அல்லது வடக்குக்கு வருகின்றன. விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் ஒரு சிறியளவிலான மேம்பாடுகள் ஏற்பட்டுவருகின்றன. மக்களின் போக்குவரத்தும் நடைபெறுகிறது. இப்படியான சில ஆக்கபூர்வமான அம்சங்கள் இருக்கிறதே தவிர, இந்தப் போர் நிறுத்தத்தால் இயல்பு நிலை தோன்றவில்லை.

மனிதாபிமானப் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டால்- சிறான் என்று அவசர, மனிதாபிமான, புனர்வாழ்வுக்கான உபகுழு நியமிக்கப்பட்டு, அது இப்பொழுதுதான் வேலைகளை ஆரம்பித்திருக்கிறது. நிதியம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அதை உலக வங்கி ஏற்று, நிதியத்தின் செயற்பாடுகள் இந்த வாரத்தில்தான் ஆரம்பமாக இருக்கின்றன. இந்த அமைப்பினால்- படிப்படியாகத்தான் மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்துக்கு உதவக்கூடியதாக இருக்கும்.

### சுயாட்சிக்கு தமிழர் தயார்

அடுத்ததாக, அரசியல் விவகாரம் என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால், விடுதலைப் புலிகள் இயக்கம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதாவது - உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையின்கீழ்- ஒரு பிரதேச சுயாட்சி, சமஷ்டி அமைப்பிலான ஒரு பிரதேச சுயாட்சியைப் பரிசீலனை செய்ய ஆயத்தமாக இருக்கிறோம் என்று ஏற்கனவே முடிவு எடுத்திருக்கிறோம்.

சமஷ்டி அமைப்பு என்பது ஒரு சிக்கலான விடயம். தமிழ் மக்களுக்குச் சமஷ்டி ஆட்சிமுறை ஆழமாக, நீண்டகாலமாகத் தெரிந்த விடயம். 50 ஆண்டுகளுக்கு முன்னரே சமஷ்டிக்கட்சி ஒன்று தோன்றி, இந்தப் பிரச்சினை முன்வைக்கப்பட்டது. இது பற்றித் தெளிவான நிலைமை தமிழர்களிடம் இருக்கிறது. தமிழர் தாயகத்தில் - தங்களது மண்ணில் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய நிர்வாகம் உருவாகவேண்டும் என்று மக்கள் தெளிவாக இருக்கின்றனர்.

### சிங்களவர் மத்தியில் சமாதான எதிர்ப்பு

ஆனால், அண்மையில்- மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு எடுத்த கருத்துக்கணிப்பின்படி சிங்கள மக்கள் மத்தியில் 70 வீதமான மக்கள் சமஷ்டிக்கு எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

அரச தரப்பினர் - பேச்சுவார்த்தைகளில் சித்தாந்த விவாதங்களை நடாத்தி - தீர்மானங்களை எடுத்துக் கொண்டு போவதில் அர்த்தமில்லை. ஏனெனில் அங்கு - அமைதிப் பேச்சுக்களுக்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரிய எதிர்ப்பு இருக்கின்றது. சந்திரிகாவின் சுதந்திரக்கட்சி முதல் ஜே.வி.பி. வரை சமாதான எதிர்ப்புக் குரல் கொடுக்கின்றார்கள். சிங்கள மக்கள் மத்தியில் சமூக பொருளாதாரப் பிரச்சினைதான் மேலோங்கி நிற்கிறதே தவிர, தமிழ்மக்களுக்கு ஒரு தீர்வு கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை. இனப்பிரச்சினைக்குத்தீர்வு கண்டால்தான் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்ற தெளிவு அவர்களிடம் இல்லை. இதனால் அரசாங்கம்தான் அமைதி முயற்சிகள் பற்றிய உண்மையான பிரசாரத்தை முன்வைக்கவேண்டும் என்று நாங்கள் சொல்லியிருக்கின்றோம்.

அரசியல் விவகாரத்தைப் பொறுத்தமட்டில் - சமஷ்டி ஆட்சிமுறைக்கு அடிப்படையான விடயங்கள் பற்றி அடுத்தமுறை பட்டியல் போட்டு, ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு விடயத்தையும் கதைக்கவிருக்கிறோம். இதிலேயும் நாங்கள் அதிக முன்னேற்றம் கண்டுதான் போகிறோம். அதேநேரம்- விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் விவகாரக்குழுவொன்றை அமைத்திருக்கின்றது. 21 பேர் கொண்டது இக்குழு. 16 பேர் எமது அரசியற்பிரிவில் அங்கம் வகிக்கும் முக்கிய உறுப்பினர்கள். ஐந்து பேர் வெளிநாடுகளில் அரசியல் வேலை செய்தவர்களும் அரசியல் முதிர்ச்சி உள்ளவர்களுமாக இருக்கிறார்கள்.

இந்தக்குழு இம்மாத முடிவிலிருந்து ஒரு உலகச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறது. முதலில் நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லண்ட், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம் என தொடர்ச்சியாக சமஷ்டி ஆட்சி நிலவுகின்ற நாடுகளுக்கும் மற்றைய நாடுகளுக்கும் விஜயம்செய்து, அந்தந்த அரசியலமைப்பு, சமஷ்டி முறை பற்றி இவர்கள் ஆராய்ச்சி நடத்துவார்கள். இந்த விஜயம் - போராளிகள் மத்தியில் மேற்குலக அரசியல் ஆட்சி முறை, அரசியல் யாப்புமுறை, சமஷ்டி ஆட்சி பற்றிய தெளிவான பார்வையை ஏற்படுத்தும். இதற்கு வெளிநாடுகள் பலவும் உதவிகளை வழங்கவுள்ளன. இந்த ரீதியில் அரசியல் விவகாரம் முன்னேற்றம் காணகின்றது.

பேச்சுவார்த்தையில் பொருளாதார முன்னேற்றமும் அதாவது - மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களோடு, சமாதானநிலையும் முன்னேற்றம் காணவேண்டுமென யசுசி அகாஷி நடந்து முடிந்த பேச்சு முடிவில் கூறியிருக்கின்றார். இரண்டையும் சேர்த்து முன்னேற்றவேண்டுமென அவர் தெரிவித்தார்.

### அழிவைத் தந்தோரே ஆக்கமும் தரவேண்டும

எமது மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தாமல், அரசியல் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. ஏனென்று சொன்னால் - தமிழீழத்தைப் பொறுத்தளவில் வீதிகள், கட்டுமானங்கள் பலவும் இடிந்து தரைமட்டமாகியிருக்கின்றன.

ஏராளமான புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப் படவேண்டியிருக்கிறது. அதற்குப் பல கோடிக்கணக்கான பண உதவி தேவை. அதற்கு வெளிநாடுகள்தான் உதவிசெய்யவேண்டும். இந்த வெளிநாடுகள்தான் இலங்கை அரசாங்கத்துக்கு நிதி உதவியையும், ஆயுத உதவியையும் செய்து இந்தப் பேரழிவுக்குக் காரணமாக இருந்துள்ளார்கள். ஆகவே, யுத்தத்தால் அழிக்கப்பட்ட எமது தமிழர் தாயகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இந்த நாடுகள்தான் உதவவேண்டும். ஆனால், நாங்கள் அரசியலைப் பேசிக்கொண்டு சும்மாவிடப்போதில்லை.

உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறப்போகிறது. பல நாடுகள், கிட்டத்தட்ட 70 நாடுகள் உதவி வழங்குவதற்கு முன்வருவார்கள். இந்த உதவிகள் வட-கிழக்குக்கும், தென்னிலங்கைக்கும் வழங்கப்படவிருக்கின்றன. பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் காண்பதென்பது பிரச்சினை இல்லை. பொருளாதார ரீதியாக எமது மக்களின் வாழ்வு மேம்பட்டால்தான் நாங்கள் பேச்சுவார்த்தையை முன்னேற்றலாம். இல்லாவிட்டால் அதில் அர்த்தமேயில்லை.

சிறான் மூலம் ஆறு வேலைத் திட்டங்கள் ஜப்பானின் உதவியோடு மேற்கொள்ளவிருக்கிறோம். இது தனிப்பட்டது. அரசாங்கத்திற்கு ஜப்பான் கொடுக்கும் கடனுதவி திருப்பிக்கட்டவேண்டும். எமக்குத் தரும் இந்த உதவியை நாம் திருப்பிக்கொடுக்கத் தேவையில்லை.

கடனுதவியைப் பெறும் அரசாங்கம் அதனை - வட-கிழக்கில் முழுமையாகக் கொட்டமாட்டார்கள். சிங்கள தேசத்தில்தான் போடப் பார்ப்பார்கள். இந்தப் பக்கமும் ஒரு வேலைத் திட்டம் பேருக்குச் செய்வார்கள்.

எமக்கு அது பிரச்சினையில்லை. எமக்கு - சிறான் மூலமும் வேறு வழிகளிலும் யுத்தத்தால் இடிந்து போய்க் கிடக்கும் வட-கிழக்கை மீளக்கட்டி எழுப்ப, உதவிவழங்கும் நாடுகளின் பெருந்தொகையான உதவி தேவை. அதற்கான திட்டங்களைக் கொண்டு அடுத்தமுறை ஜப்பானுக்குப் போகிறோம். அங்குதான் முக்கிய முடிவு எடுப்போம்.

### முஸ்லிம் மக்களை இணைத்தே செல்வோம்

முஸ்லிம்களின் விடயங்களைப் பற்றி இம்முறை - அமைச்சர் ஹக்கீமுடன்- நான், கருணா அம்மான், தமிழ்ச்செல்வன் ஆகியோர் நீண்ட நேரம் பேசினோம். சில விடயங்களை மனந்திறந்து பேசினோம்.

அதாவது - விடுதலைப் புலிகள் ஒருபோதும் முஸ்லிம் தலைமைத்துவத்தை ஒதுக்கப்போவதில்லை, முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைகளைப் புறந்தள்ளப்போவதில்லை, முஸ்லிம் மக்களையும் இணைத்துத்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவிருக்கிறோம்.

அதனால், நீங்கள் வீணாகச் சந்தேகப்பட்டு கண்டபடி அரசியல் அறிக்கைகளை விடவேண்டாம் என்று கூறியிருக்கிறோம். எங்களுடன் சேர்ந்து வேலைகளைச் செய்யுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னோம்.

கொழும்பிலிருந்து அறிக்கைகளை விட்டால், அதில் வேலையில்லை. கிழக்கில் கருணா அம்மான் இருக்கிறார், அவருடன் பேசித் தீர்க்கலாம். அரசியல் பிரச்சினை என்றால் தலைவர் பிரபாகரன் இருப்பார். தமிழ்ச்செல்வன் இருப்பார். சிலவேளை, நானும் அங்கு நிற்கும்போது பேசலாம். அங்கு வாருங்கள் என்றோம்.

இரண்டு விடயங்களைக் கதைக்கலாம். ஒன்று - எத்தகைய தீர்வினை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்பது. எங்களைப் பொறுத்தவரையில் வட-கிழக்கு தமிழ்பேசும் தாயகமாக இருக்கிறது. அதில் நீங்களும் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள். அந்த யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு நாங்கள் பேசுவோம்.

சமஷ்டி ஆட்சிமுறை என்றால், தமிழ்பேசும் தாயக அடிப்படையில்தான் பேசவேண்டும். அதற்குள் முஸ்லிம் மக்களுக்கு எவ்வித ஆட்சி உரிமை, பாதுகாப்பு போன்ற பல விடயங்கள் இருக்கின்றன. இவற்றைப் பற்றிப் பேசலாம். இதற்கு - நீங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

தற்போது - முஸ்லிம் காங்கிரஸ் ஒற்றுமையாக வருவதற்கு முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் - இவர்கள் பிரதமரையும், ஜனாதிபதியையும் சந்திக்கிறார்கள், அவர்களிடம் தாங்கள் தனிக்குழுவாகப் பேச்சுக்குப் போகவேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள்.

ஆனால் நாங்கள் சொன்னோம்- இவர்களிடம் கேட்டால் பிரயோசனமில்லை. தனிக்குழுவாகப் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டுமென்றால், எங்களின் அனுமதி வேண்டும். எங்கள் அனுமதி இருந்தால்தான் நீங்கள் வரலாம்.

ஏனென்றால் - 25 வருடகாலப் போராட்டத்தின் விளைவாக 2 பிரதான சக்திகளான- அரசும் ஒரு விடுதலை இயக்கமும் பேச்சுக்களை நடத்துகின்றன. இதனால் முஸ்லிம் மக்களை ஓரங்கட்டி ஒதுக்கவில்லை. உங்களுக்கும் இடந்தருவோம். ஆனால் -

முஸ்லிம் மக்களின் பிரச்சினை பேசப்படும்போதுதான் நீங்கள் வரலாம். மற்றையது, மூன்று தரப்புப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, நாங்கள் இந்த 25 வருடகாலமாக இரத்தம் சிந்திப் போராடவில்லை. ஆனாலும் - எமது மக்கள் என்னும் போது நாம் முஸ்லிம் மக்களை புறந்தள்ளமாட்டோம். அவர்களையும் எங்களது மக்களாகக் கருதி நாம் நேரம்வரும்போது பேச்சுக்களுக்கு அழைப்போம். முஸ்லிம் மக்களும் நாமும்- மொழியில் ஒன்றுபட்ட மக்கள். பொருளாதார வாழ்வில் ஒன்றிணைந்த மக்கள். பிரதேசத்தால் ஒன்றிணைந்த மக்கள். ஆகவே, அந்த மக்களை இணைத்துக்கொண்டுதான் நாங்கள் ஒரு சுயாட்சி வடிவத்தில் ஒரு தீர்வைக் காணவேண்டும். ஆனபடியால் முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளாமல், சந்தேகம் கொள்ளாமல் இருக்கவேண்டும். முதலில் - அவர்கள் கருணா அம்மானை இந்த 27 ஆம் திகதி சந்திக்கவிருக்கிறார்கள். அதன்பின்பு தமிழ்ச்செல்வனைச் சந்திக்கச் சொல்லியிருக்கிறோம். அமைச்சர் ஹக்கீம் சந்தோஷமாகத்தான் போகிறார். விரைவில் இச்சந்திப்புக்கள் நடக்கும்.

### மனித உரிமைகள் பற்றி அபாண்டமான குற்றச்சாட்டு

மனித உரிமைகளைப் பற்றிப் பேசினால் - யார் குற்றஞ்சாட்டுகிறார்கள் என்று பாருங்கள். யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு என்று ஒன்று அறிக்கை விடுகின்றது. ஆனால், உண்மையில் அங்கு அப்படியான அமைப்பே இல்லை. இதனை சிங்களப் பத்திரிகைகள் பெரிதாகப் போடுகிறார்கள். இதுதான் உண்மை.

சிறுவர்களைப் பிடிப்பதாக, ஆட்களைக் கொல்வதாக, மற்றைய அமைப்புக்களைச் செயற்பட விடாததாக ஒவ்வொரு மாதமும் எம்மைத் திட்டி அந்த அமைப்பு எழுதுவார்கள். அதனை - ஒரு சில பத்திரிகைகள்- 'ஐலண்ட்' போன்ற பத்திரிகைகள் பிரமாதப்படுத்தி பிரசுரிப்பார்கள்.

ஆனால் - உண்மையில் இவர்களுக்கு பின்னால் யாரென்று பார்த்தால் - டொக்டர் கூல் போன்றவர்கள், சந்திரிகா அரசாங்கம், இன்னும் அமெரிக்காவிலிருந்தும் காசை வாங்கிக்கொண்டு - எங்களைத் திட்டி எழுதுகிறார்கள்.

தமிழர் பிரச்சினை தீர வேண்டும். இந்த யுத்தம் ஒழிந்து அமைதி நிலை தோன்றவேண்டும். மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்ற சிந்தனை எதுவும் இவர்களிடம் இல்லை. ஏதோ, புலிகளைத் திட்ட வேண்டுமென்றே எழுதுகிறார்கள். மனித உரிமைகள்பற்றிக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

மற்றும்படி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு போன்ற அமைப்புக்கள், அம்னெஸ்ரி இன்ரநெஷனல், ஐ.சி.ஆர்.சி. ஆகிய அமைப்புக்களிடமிருந்து வரும் குற்றச்சாட்டுக்களை சீரியஸாக எடுக்கிறோம்.

அதில் - பிரதானமாக சிறார்களை இராணுவத்தில் சேர்ப்பதுதான் எம்மீதான பிரதான குற்றச்சாட்டு. இதற்காக - கடந்த சிலமாதங்களாகத் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

தலைவர் அவர்கள், தளபதிகளுக்கு இறுக்கமான கட்டளை விடுத்திருக்கிறார். பதினெட்டு வயதுக்குக் குறைவான ஆட்களை எடுக்கவேண்டாம் என்று.

பதினெட்டு வயதுக்குக் குறைந்த 400 சிறுவர்களை தமிழ்ச்செல்வன் பெற்றோரிடம் ஒப்படைத்திருக்கிறார். இந்தப் பெயர் விபரங்களை - அம்னெஸ்ரி இன்ரநெஷனல், யுனிசெப் ஆகிய நிறுவனங்களிற்குக் கொடுத்திருக்கிறோம். அப்படியிருந்தும் சிறுவர்கள் வருகிறார்கள். ஏன் வருகிறார்கள் என்றால் - சண்டைக்காக அல்ல, ஆயுதப்பயிற்சிக்காக அல்ல. வயிற்றுப்பசிக்காக வருகிறார்கள். ஏழைக்குடும்பங்களிலிருந்து எங்களுக்கு வழி காட்டுங்கள் என்று வருகின்றார்கள். எங்களுக்குப் படிக்க வசதியில்லை, வாழ வசதியில்லை. வீட்டில் வறுமை கூடிவிட்டது - ஆகவே, உங்களிடம்தான் எங்கள் எதிர்காலம் இருக்கென்று வருகிறார்கள். அவர்களை, வெளியே போவென அடித்துக் கலைக்க முடியாது. அப்படி வருபவர்களை - நாம் பல சிறார் இல்லங்களில் சேர்த்து வைத்திருக்கிறோம். இவர்களுக்கு ஒழுங்கான புனர்வாழ்வைச் செய்யச் சொல்லி- எம்மை விமர்சிக்கின்ற இந்த ஐ.நா. நிறுவனங்களைக் கேட்கிறோம். ஒருவராவது வந்து, எம்மிடமுள்ள - இரண்டு வயதிலிருந்து - 16 வயது வரையான ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உதவத் தயாரில்லை.

எம்மிடம் நிதியில்லாத போதும்- பெருந்தொகை நிதியை செலவழித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது யுனிசெப்பிடம் கேட்டிருக்கிறோம். எங்களுடன் சேர்ந்து - சிறுவர்களுக்கான பயிற்சி நிலையங்கள், கல்வி நிலையங்கள், புனர்வாழ்வு நிலையங்களை அமைத்து - நீங்கள் பொறுப்பெடுங்கள் என்றோம்.

இவர்கள் உதவி செய்யாவிட்டால், எல்லா ஆயிரக்கணக்கான சிறுவர்களையும் அழைத்துச்சென்று- ஐ.நா. நிலையங்களுக்கு முன் நிறுத்தி விடுவோம், சத்தியாக்கிரகம் செய்யுங்கள் என்று. அப்படியான நிலைக்கு இந்த நிறுவனங்கள் எம்மை ஆளாக்க வேண்டாம் என்றார் பாலசிங்கம்.

---

### சீனநாட்டு மீன்பிடி...

களையே கண்டதாக சீன மாலுமிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, கொழும்பிலுள்ள சீனத்தூதரகம் கருத்துத் தெரிவிக்கையில், தமது நாட்டு மீன்பிடி ட்ரோலரான பூ-சுவான் யூ - 225 இல் 23 மீனவர்கள் சம்பவத்தின் போது இருந்ததாகவும், 8 மீனவர்கள் மட்டுமே மற்றொரு ட்ரோலரினால் மீட்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

(க)


## மரண அறிவித்தல்



### திருமதி மாணிக்கம் இராசம்மா

அன்னார் 21-03-2003 (நேற்று) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ் சென்றவர்களான தங்கம்மா, கந்தையா மற்றும் மார்க்கண்டு ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.03.2003 (நாளை) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

73, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

(சி-701)

தகவல்
வ. மார்க்கண்டு
(சகோதரன்)


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.